# நகரசபையும்
# பொதுமக்களும்

CONNEMARA PUBLIC LIBRARY
28 MAR 1957
MADRAS

"இந்தப் பத்திரிகை நடத்துபவர்களை நான் பகிரங்கமாகப் பாராட்டுகிறேன். அனைவரும் வாங்கிப் படிக்கச் சிபார்சு செய்கிறேன். ஏனென்றால், இதில் பொய் கலக்கவில்லை"

—ராஜாஜி

[காப்டன் டி. ஞானஒளிவு அவர்கள் 'மதுரை நகரசபைச் செய்தி' என்ற மாத இதழை நடத்தியபோது 24-7-52ல் ராஜாஜி மேற்கண்டவாறு கூறினார்.]

# நகரசபையும் பொதுமக்களும்

காப்டன் டி. ஞானஒளிவு, எம்.ஏ.,

விற்பனை உரிமை :—

வேல் புத்தக நிலையம்

152-A, ராயப்பேட்டை ஹைரோடு,

மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு : நவம்பர் '56.

விலை ரூ. 1—8—0

வெளியீடு :
நகரசபைக் காரியாலயம்
சென்னை—20.

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை—14.

CONNEMARA PUBLIC LIBRARY
23 MAR 1957
MADRAS

# பதிப்புரை

பொது வாழ்வில் ஈடுபடுவோர்களுக்கு ஸ்தல சுயாட்சி நல்ல பயிற்சி ஸ்தலம் என்பது பலருடைய அனுபவம். இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் அலகாபாத் நகர சபைத் தலைவராக இருந்திருக்கிறார். ராஜாஜி அவர்கள் சேலம் நகர சபைத் தலைவராயிருந்தார். இப்படியாக அரசியல் தலைவர்கள் பலர் ஆரம்ப காலத்தில் ஸ்தல சுயாட்சியில் பங்கு கொண்டு சேவை செய்திருக்கின்றனர்.

ஸ்தல சுயாட்சியில் புதிதாக ஈடுபடுபவாகள், அதற்குரிய விஷயங்களை நன்கு தெரிந்துகொள்வது மிக அவசியம்.

நகர சபைத் தலைவர்கள், அங்கத்தினர்கள், பொதுமக்கள், அதிகாரிகள், சிப்பந்திகள் ஆகிய அனைவரும் அவரவருக்குரிய கடமை என்ன என்பதைச் சரிவரத் தெரிந்துகொண்டால் ஸ்தல சுயாட்சியின் சேவை வெற்றிகரமாக விளங்கும்.

ஸ்தல சுயாட்சி நிர்வாக விஷயத்தில் திறமையும், யோக்கியமும், ஆர்வமும் கொண்ட கமிஷனர்கள் சிலர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்களில் காப்டன் டி. ஞானஒளிவு அவர்கள் முதல் ஸ்தானம் வகிப்பவர். மதுரை நகர சபையின் சரித்திரத்தில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் சேவை செய்தவர் அவர்தான்! அழகு நிறைந்த மதுரை மாநகரைக் காண்பவர்களுக்கு ஞானஒளிவு அவர்களின் சேவையும் திறமையும் நன்கு தெரியவரும். அவர் மதுரையிலிருக்கும்போது முதன்முதலாக "நகர சபைச் செய்தி" என்ற மாத இதழை நடத்தினார். அதன் மூலம் நகர சபை விஷயங்களை எல்லாம் தெளிவாக விளக்கி, 'நகர் உணர்ச்சி'யைத் திறமையுடன் போதித்தார்.

பலரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற ஆர்வத்தால் மேற்படி கட்டுரைகளை ஒன்று திரட்டி இந்நூல் வெளியிடப்படுகிறது.

சென்னை-20
20-11-56

—முல்லை முத்தையா

2. MAR 1957
MADRAS

# பொருளடக்கம்

1. நகர சபையும் பொதுமக்களும்
2. நகர சபைக் காரியாலயம்
3. நகர சபை நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது?
4. நகர் உணர்ச்சி
5. நகர வாசியின் கடமை
6. ஆக்கிரமிப்புகள்
7. ரஸ்தாக்களை உபயோகிப்பது எப்படி ?
8. கழிவு தண்ணீரைக் கடத்திவிடுதல்
9. சப்தத்தை குறைக்கக் கூடாதா ?
10. மதியின்றி உமிழ்தல்
11. அனுமதியற்ற கட்டிடங்களை அகற்றுதல்
12. தேர்தலும் உத்தியோகஸ்தர்களும்
13. நகரசபைகளின் பொருளாதாரம்
14. கமிட்டி முறை

★

PUBLIC LIBRARY
28 MAR 1957
MADRAS

# 1. நகர சபையும் பொதுமக்களும்

புராதன இந்தியாவில் கிராமப் பஞ்சாயத்துகள் சிறப்புற்றிருந்தன. சந்தேகமில்லைதான். இருந்தாலும், ரிப்பன், மேயோ பிரபுக்களால்தான் நவ இந்தியாவில் ஸ்தல ஸ்தாபன முறை மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட்டது. முன்னாலும் சரி, இப்பொழுதுங்கூட நிர்வாகக் கலையின் பயிற்சிக் கூடங்களாகவே ஸ்தல ஸ்தாபனங்கள் மதிக்கப் பட்டு வருகின்றன. நம் ராஜ்யத்திலே ஸ்தல ஸ்தாபன முறை பஞ்சாயத்து, நகரசபை, ஜில்லா போர்டு என மூன்று வகையாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. நாம் நகரசபைகளைப்பற்றிக் கவனிப்போம்.

உலகில் உள்ள எல்லா ஸ்தல ஸ்தானபங்களுக்கும் பொதுவான ஒரு தனிக் குணம் உண்டு. அதாவது வரி செலுத்துவோர் அத்தனை பேரும் தங்கள் ஸ்தல ஸ்தாபனம் பற்றி முணுமுணுப்பதில் இன்பங்கொள்ளும் புதுமைதான். வரிசெலுத்துவோரின் தினசரி வாழ்விலே ஸ்தல ஸ்தாபனம் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டி

ருப்பதுதான் இதற்கு மூல காரணம். டில்லி மத்திய மந்திரியின் ராஜிநாமா விஷயத்தைக் காட்டிலும், தன் தெருவைச் சுகாதார இன்ஸ்பெக்டர் பார்வையிடவில்லை என்பதைப் பற்றி நகரவாசி மிகவும் கவனம் உள்ளவராக இருப்பார். நியாயமான காரணங்களுக்கு அதிருப்தி கொள்வது வரவேற்கக்கூடியதே. ஏனென்றால், அதிருப்தியே முன்னேற்றத்தின் வித்து. ஆனால் தனக்குள்ள உரிமைகள் பற்றி முணுமுணுக்கும் பொழுது, தன்னுடைய கடமைகளைச் செய்துவிட்டோமா என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும்.

இம்மாதிரி நகரவாசியும், நகரசபையும் பரஸ்பரம் தங்கள் உரிமைகளையும், கடமைகளையும் ஏககாலத்தில் உணர நேர்ந்தால், பரஸ்பர கூட்டுறவு ஏற்பட முடியும். நகர மக்களுக்கு தடுக்க முடியாத குறைவான தொந்தரவைக் கொடுத்து அளவற்ற இன்பத்தை அளிப்பதற்கு உதவும் வகையில் இயங்குவதே நகரசபை. ஒரு சங்கம்போல அல்லது வீடுபோல இது நடத்தப்படுகிறது. வீட்டின் தந்தைக்கும் சங்கத்தின் காரியதரிசிக்கும் ஒரு சில கடமைகள் இருப்பது போல குழந்தைகளுக்கும், அங்கத்தினர்களுக்கும் சில பொறுப்புகள் உண்டு. எப்பொழுதும் உரிமைகளைப் பற்றிக் கேட்டுக்கொண்டே இருப்பது நல்லதல்ல. ஒருவருடைய கடமை மற்றவரின் உரிமை.

தன் உரிமைகளைப் பற்றிக் கூக்குரலிடுவதற்கு முன்னால், நகரசபைக்குச் செய்ய வேண்டிய முதற் கடமையான சொத்து வரி, தொழில் வரி, சைக்கிள் வரி, மின்சாரக் கட்டணம் முதலிய பாக்கிகளைக் காலாகாலத்தில் செலுத்தி விட்டோமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

எந்த நிர்வாகத்திற்கும் பொருளாதாரமே ஜீவன். நகர சபைப் பாக்கிகளைச் செலுத்தாமல் தட்டிக் கழிப்பது கெட்ட செய்கை அல்ல என்று பலர் நினைப்பதை யாரும் அறிவார்கள். ஆனால் நிர்ப்பந்தம் இல்லாமல் சர்க்காரின் வரிகள் காலா காலத்தில் செலுத்தப்பட்டு விடுகின்றன. பொருளாதாரத்தை ஒரு நகர சபை பெற்றுவிட்டால், நகரின் நன்மைக்கு மக்களின் பிரதிநிதிகளால் வகுக்கப் பட்ட நல்ல முறையிலே செலவழிக்க வேண்டிய கடமை ஏற்பட்டு விடுகிறது.

நல்ல ரோடுகள் அமைத்துப் பராமரிப்பது நகர சபை களின் முதற் கடமை. மதுரையில் செய்திருப்பதுபோல் லட்சக்கணக்கில் செய்திருக்கும் சிமெண்ட் கான்கிரீட் ரோடுகள், தார் ரோடுகள் போடுவதுடன், விசாலமான தூசியற்ற தளங்கள், மழை வடிகால்கள் அமைத்தும் தர வேண்டும். நகர வாசிகள் இவைகளை எதிர்பார்க்க உரிமை உண்டு. அதேபோல அவைகளை நல்ல முறையில் உபயோகிக்கும் பொறுப்பும் அவர்களுக்கு உண்டு. பொது ரஸ்தாக்கள் அனைவருக்கும் சொந்தம். அங்குமிங்குமாக பொது ரஸ்தாக்களை ஆக்கிரமித்துச் சொந்தச் சொத்தாக மாற்றிக்கொள்ள முயற்சிக்கக் கூடாது. பொது ரஸ்தாக்களை குப்பைத் தொட்டிகளாக, கக்கூசுகளாக மதச் சடங்குகளுக்குப் பந்தல் போடுமிடங்களாக உபயோகிக்கக்கூடாது. பல வழிகளில் ரஸ்தாக்களைப் பாழாக்கும் சமூக விரோதிகளை நகரின் நல்ல பிரஜைகள் தடுக்க வேண்டும்.

நகர சபையின் நிதி, அனுமதிக்கும் அளவுக்கு நல்ல தண்ணீர் விநியோகத்தை எதிர்பார்க்க நகர வாசிக்கு

உரிமை உண்டு. லட்சக்கணக்கான ரூபாய்களைச் செல வழித்து பாதுகாக்கப்பட்ட தண்ணீர் விநியோகத்தை, தொண்ணூறு நகர சபைகளில் சுமார் முப்பதுதான் பெற்றிருக்கின்றன. அதே சமயத்தில் இந்த அருமையான குடிதண்ணீரை—50 லட்சம் ரூபாய் செலவில் விரிவான குடிதண்ணீர் விநியோகத் திட்டம் தீவிர பரிசீலனையில் இருக்கிறது. தோட்டங்களுக்கு, குளிப்பதற்கு, பாத்தி ரங்கள் கழுவுவதற்கு, வேஷ்டிகள் துவைப்பதற்கு உபயோகிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பொதுக் குழாய்களில் தண்ணீர் ஒழுக விடுவதையோ, குழாய்களை பாழாக்குவதையோ பார்த்த மக்கள் பராமுகமாய் இருப் பதைத் தெரிய மிகவும் மனம் நோகிறது. தண்ணீர் குழாய்களில்லாத பாகங்களில் தண்ணீர் விநியோகம் செய்யும் லாரிகளில் "கியூ" முறையில் நின்று பழகிக் கொள்ள வேண்டும். பொதுக் கிணறுகளைச் சுத்தப் படுத்தி, ஆழமாக வெட்டி தண்ணீர் கிடைக்கச் செய் கிறோம். பக்கத்திலுள்ளவர்கள் அவைகளை நல்ல முறையில் உபயோகிப்பதற்கும், சுத்தமாக வைத்திருப்ப தற்கும் பொறுப்பா யிருக்கவேண்டும். நகர சபையே ஒவ்வொன்றும் செய்யவேண்டுமென எதிர்பார்ப்பது ஜனநாயக முறைக்கே புறம்பானது.

பாதாளச் சாக்கடையோ, திறவைச் சாக்கடையோ கட்டிக்கொடுப்பது நகர சபையின் பொறுப்பு என்றாலும், வீட்டின் சொந்தக்காரரோ, குடியிருப்பவரோ தங்கள் வீட்டின் முன்னே உள்ள சாக்கடைத் தண்ணீர் இலகுவாக ஓடிக்கொண்டிருக்க சாத்தியப்பட்ட எல்லா வழிகளையும் செய்யலாம். ஒவ்வொரு நாளும் நம்மையுமறியாமல் குப்பைகளைச் சாக்கடையிலே எறிந்து விடுகிறோம். வீடு

களுக்கு முன்னால் தண்ணீர் தேங்குவதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. ஆனால் அவைகளில் வாசனை ஆரம்பித்துவிட்டால் மிகவும் கோபப்படுகிறோம்.

நகரின் $3\frac{1}{2}$ லட்சம் மக்கள் செய்யும் அசுத்தங்களை சுமார் 1400 நகரசுத்தித் தொழிலாளர்கள் சுத்தம் செய்ய முடியுமா? மக்கள் தீய வழிகளில் அசுத்தப்படுத்துவதை நிறுத்தினாலொழிய, நகர சுத்தித் தொழிலாளர்கள் முழு முயற்சி செய்தாலும் நகரின் சுகாதார நிலைமையை நல்ல முறையில் வைக்க முடியாது.

ஹாலந்து நாட்டிலே, தன் வீட்டிற்கு முன் உள்ள இடத்தை எப்பொழுதும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு வீட்டுக்கரசியின் கடமையாகும். ஜெர்மனி தேசத்திலே ஒருவன் புகைபிடிக்கப்பட்ட சிகரட் துண்டை தெருவிலே எறிந்த சில நிமிஷங்களுக்குள் கைது செய்யப்பட்டு, சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, உடனடியாக அபராதம் விதிக்கப்பட்டு, கைது செய்யப்பட்ட அந்த இடத்திலேயே கொண்டுவந்து விடுவிக்கப்படுவான். சிங்கப்பூரிலே, நாய், பூனைகளின் தொந்தரவைக்குறைப்பதற்காக அவைகளுக்கு இருபது டாலர்களுக்கும்மேல் வரி விதிக்கப்படுகிறது. நகரில் வண்டிப்பேட்டைகளோ, பசுக்கொட்டங்களோ, அங்கு இல்லை. நமது பம்பாய் நகரிலுங்கூட சென்ற ஆண்டில் நகரில் உள்ள எல்லா மாட்டுக் கொட்டங்களையும் ஒரேயடியாக முப்பது மைல் தூரத்திற்கப்பால் முனிசிபல் எல்கைக்கு வெளியே அப்புறப்படுத்தப்பட்டது.

ஸ்நானம் செய்வதுடன் சுத்தமடைந்து விட்டதாக திருப்தி யடைகிறோம். சூழ்நிலை சுகாதாரத்தைக் கவனிப்ப

இல்லை. நம் அறையிலே, வீட்டைச் சுற்றி, காரியாலயத்தினுள்ளே, பாதை மேலே குப்பை, கூளங்கள் கிடப்பதைச் சகித்துக் கொள்கிறோம். சுமார் 15, 16 ஆண்டுகளுக்கு முன்னேயே மதுரை நகர சபை மகத்தான கக்கூசுகள் கட்டியிருந்தும், இன்று அவைகள் எப்படி உபயோகப்படுகின்றன? கக்கூசுகளைச் சுற்றி, கக்கூசுகளின் வழியிலே மலஜலபாதை கழித்து விடுகிறார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் இம் மாதிரி அசுத்தப்படுத்துவதை ஒரு தோட்டியால் எப்படி சுத்தப்படுத்த முடியும்? ஹோட்டல்களிலும், சினிமாக் கொட்டகைகளிலும் வசதியான கக்கூசுகள் அமைக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையை விதித்து, நல்ல முறையில் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென நகர சபை பார்த்துக் கொள்ளலாம். ஆனால், நகரவாசிகள் எப்படி நடந்து கொள்கிறார்கள்? சினிமாக் கொட்டகைகளில் எச்சல் துப்புவதைப் பார்ப்பீர்கள். ஹோட்டல்களிலே அவர்கள் எங்கு கையலம்புகிறார்கள்? சினிமாக் கொட்டகையிலே எங்கு சிறுநீர் கழிக்கிறார்கள்? ஒரு பக்கத்திலே மாத்திரம் இது செய்ய வேண்டிய கடமையா? மற்றவர்களுக்கும் பொறுப்பு இல்லையா? நாம் விரும்பும் உரிமைகளுக்கு அதற்குரிய நம்முடைய கடமைகளையும் செய்தாக வேண்டும் அல்லவா?

இம்மாதிரி பரஸ்பர உரிமைகளும் கடமைகளும் எண்ணற்றவை. நகர சபை நல்ல முறையிலே பிரசவ விடுதி ஏற்படுத்தி நடத்தினால், மக்கள் தங்கள் பழைய முறைகளை விட்டுவிட்டு இங்கு வந்து குவிய வேண்டும். முன்னேற்றமான முறையில் நகரத்தை விசாலப்படுத்த நகர சபையின் நகரமைப்புத் திட்டம் வெற்றியடைய, கட்டிட விதிகளுக்கும், திட்டத்தின் விதிகளுக்கும் புறம்

பாகப் போவதில்லை என வீடு கட்டும் ஒவ்வொருவரும் விரதம் எடுத்துக்கொள்ள வேண்டும். நல்ல பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், மரங்களடர்ந்த சாலைகள் அமைக்க வேண்டுமென நகர சபை திட்டமிட்டுச் செய்து வந்தால், மக்கள் அவைகளை நல்லமுறையில் உபயோகிக்க வேண்டும். செடிகளைப் பாழாக்குவதை நிறுத்த வேண்டும். செடிகளை ஒடிப்பதைத் தடுக்க வேண்டும்.

நகரின் கூட்டு வாழ்க்கை அப்பொழுதுதான் உதயமாகும். பரஸ்பரம் ஒத்துழைத்து நல்ல காரியத்திற்குப் பாடுபடுவதன் மூலம் பால பருவத்திலிருக்கும் நம் புதிய குடியரசுக்கு நாம் சிறந்த நன்மை செய்தவர்களாவோம்.

★

## 2. நகர சபைக் காரியாலயம்

நகரவாசிகளே! கொஞ்சம் கவனியுங்கள்: ஆரம்ப காலத்திலிருந்தே நகர சபையின் அலுவலகத் திறமைபற்றி மக்கள் பொதுவாக நல்ல அபிப்பிராயம் கொள்ளாதது வருந்தத் தக்கதே. குறைந்தது 15, 17 ஆண்டுகளாக அனுபவமுள்ள அதிகாரிகள் நகர சபைகளில் உத்தியோகம் பார்த்து வருகிறார்கள். நகர சபைகளின் நிர்வாகம் வருஷாந்திர மேற்பார்வை மூலமாக, கணக்குத் தணிக்கைகள் மூலமாக '**மாதந்தர அறிக்கைகள்**' மூலமாக, இலாக்காக்களின் உயர்தர அதிகாரிகள் நேரில் வந்து பார்ப்பதன் மூலமாக சரியான கட்டுப்பாட்டின்கீழ் இருந்து வருகிறது, இதே அளவிலும், முக்கியத்வத்திலும் சமத்துவமான இதர அலுவலகங்களுடன் ஒப்பிட்டால் எந்த நகர சபை அலுவலகமும், தரத்திலோ தன்மையிலோ, உத்தரவாதத்திலோ குறையாதபடி, வந்த வந்த மனுக்களைப் பரிசீலனை செய்து பைசல் செய்வதிலும், நகர சபையின் நிர்வாகத்தைத் திறமையுடன் நடத்திச் செல்லுவதிலும் குறைந்ததல்ல என்றே சொல்லலாம்.

இவ்வளவு பெரிய அலுவலகத்திலே, வெள்ளம் போல் குவியும் கடிதப் போக்குவரத்துகளிலே என்னதான் முயன்றாலும் வருஷத்திலே எண்பத்தைந்து சத வீதத்திற்கு மேல் பைசல்கள் எதிர்பார்க்க முடியாது.சர்க்காரின் வருமான இலாகா பற்றியோ, ரெவின்யூ இலாகா பற்றியோ பொது மக்கள் அவ்வளவாக முணுமுணுப்ப தில்லை ; ஆனால் நகர சபையைத் தீவிரமாகக் கண்டிக்கத் தயங்குவதில்லை. பஸ்களில், கிளப்புகளில், தெருக்களில் எந்த இடமாயிருந்தாலும பேசித் தீர்த்து விடுவார்கள். இதற்குக் காரணம ஒருவேளை சிப்பந்திகள் பூராவும் உள்ளூர்க் காரர்களாகவும், மிகவும் தெரிந்தவர்களாகவும் இருப்பதினால் ஏற்படலாம், நகர சபை அலுவலகத்திலே மிகவும் இலகுவாகத் தொடர்பு இருப்பதினாலும் ஆகலாம். அல்லது மிகப் பழக்கப்பட்டதாலும், என் அன்பு காரணமாகவும் இருக்கலாம். தினசரி வாழ்விலே சம்பந்தப்பட்ட பலவகையான விஷயங்களிலே, பிறப்பு முதல் இறப்பு வரையும் முனிசிபல் நிர்வாகத்தில் அடிக்கடி தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எதையாவது சொந்தம் பாராட்டினால் அங்கே அதிருப்தியையும் எதிர் பார்க்கலாம். இப்படிப்பட்ட முணுமுணுப்பு பொது மக்களுக்கு சாதாரணமாக இன்பமும் அளிப்பதாக இருக்கிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில், சம்பளம் பெறும் அதிகாரிகள்என இரு அதிகாரம் படைத்தவர்கள் உண்டு. இவ்விரு பிரிவுகளும் ஒன்றை யொன்று தழுவி நகர சபையின் நிர்வாகத்தை நடத்திச் செல்கிறார்கள். கடிகாரச் சக்கரங்களின் பற்களைப்போல் ஒன்றை யொன்று தள்ளிக் கொண்டிருக்கும் இதில் முக்கியமான ஒரு வித்தியாசம்

உண்டு, அதிகாரிகளாகிய சக்கரம் ஒரே திசையை நோக்கி சட்ட திட்டங்களுக்கும், விதிகளுக்கும் உட்பட்டுத் தான் இயங்க முடியும். ஆனால் எத்திசையிலும் சுழலக் கவுன்சிலுக்குச் சுதந்திரம் உண்டு. ஒன்றுக்கொன்று தொடர்புள்ள இவ்விரு சக்கரங்களும் எந்த விஷயத்தி லாவது ஓடாமல் நிற்க நேரிட்டால் ராஜ்ய சர்க்கார் தலையிட்டு, சக்கரங்களிலுள்ள முட்டுக் கட்டையை நீக்கி எண்ணெய் போட்டு மறுபடியும் சரியாக—ஒன்றாக இயங்கும்படி செய்யும். நகர சபைக்கும், நிர்வாக அதிகாரிகளுக்கும் அடித்தளம் நகர சபையின் காரியாலயம்தான்.

நகர சபையின் சேர்மன் அதனுடைய தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவர், நகரின் முதல் பிரஜையும் அவர்தான். அரசாங்கம் வகுத்துள்ளபடி நகர சபை அங்கத்தினர் களுடனும், பொதுமக்களுடனும் கலந்துகொண்டு நகர சபையின் பொதுவான கொள்கையை வகுக்கும் முக்கிய பொறுப்பும் இவருக்குத்தான். நகரின் அபிவிருத்திக்காக முக்கிய திட்டங்களை ஆரம்பிப்பதும் இவருடையதே. நகர சபை அதிகாரிகளுக்கும், அவர்களின் கீழ் வேலை பார்க்கும் எல்லா சிப்பந்திகளுக்கும் கமிஷனரே தலைவர். சுருங்கச் சொன்னால் நகர சபையில் வேலை பார்க்கும் அனைவரும் ஒரே நிர்வாக அதிகாரியின் கீழ் ஒரு கட்டுப்பாடுள்ள அணியாக வேலை செய்தால், கவுன்சில் அங்கீகரிக்கும் தீர்மானங்களையும், திட்டங்களையும் கொள்கைகளையும் அமுல் நடத்தும், திறமையான சாதனமாக நிர்வாகச் சிப்பந்திகள் அமைவார்கள். கட்டுப்பாடின்மையையும், குழப்பத்தையும் தவிர்க்க கவுன்சிலுக்கும், சிப்பந்தி களுக்கும் ஒரு தொடர்பாக கமிஷனர் இருக்கிறார். கவுன்சிலின் சட்டபூர்வமான தீர்மானங்கள் அத்தனை

யையும் அமுல் நடத்துவது கமிஷனரின் அதிகாரபூர்வ மான கடமையாகும். அவர் நகர சபை அலுவலகத்தின் உதவியால் நடத்தி வருகிறார்.

நகர சபையின் அலுவலகம் பற்றிய ஒரு படப்பிடிப்பு மேலே தரப்பட்டிருக்கிறது. இருந்தாலும் நகர சபையில் தங்கள் காரியங்களை எப்படி சாதித்துக் கொள்வது என்ற உபயோககரமான குறிப்புகள் கொடுக்க வேண்டுமென்பதே இதன் நோக்கம். நகர சபையின் நிர்வாகத்துடன் வரி கொடுப்போர்களுக்குப் பல வேலைகள் உண்டு. தொழில், சொத்து வரிகள், செலுத்த வேண்டிய இதர வரிகள், சுகாதார இலாகாவுக்குக் கட்ட வேண்டிய கட்டணங்கள், சைக்கிள், நாய்களுக்கு வாங்க வேண்டிய வில்லைகள். கட்டடப் பிளான்களை அங்கீகாரம்பெற, தண்ணீர்க்குழாய், மின்சாரத் தொடர்புகளுக்கு அனுமதி வாங்க, நகர சபை மைதானங்கள், கட்டிடங்களை உபயோகித்துக் கொள்வ தற்கு உத்தரவு வாங்க, இன்னும் இது போல பலப்பல ரஸ்தாக்கள், சாக்கடை, தண்ணீர் விநியோகம், விளக்கு வசதிபற்றி தங்கள் குறைகளை எடுத்துக்கூற ; அவைகளை நல்ல முறையில் சரிபடுத்த ; இவ்விஷயங்கள்பற்றி எவ் விதம் நடக்கவேண்டும்? யாரை அணுக வேண்டும்? எப்படி முடித்துக்கொள்ள வேண்டும்? தங்கள் குறைகளைப் போக்கிக் கொள்ளச் சரியான முறை தெரியாத காரணத் தால் பலர் அனாவசியமாக முணுமுணுப்பதிலேயே இருக்கிறார்கள்.

புகாருடன் வரும் நகர வாசிக்கு ஒன்று கூறலாம் எந்தவிதமான நடவடிக்கையிலும் இறங்குமுன் முதலில் உங்கள் புகார் பற்றிய முடிவான விவரங்கள் அத்தனையை

யும் தெரிந்து கொள்ளுங்கள். இது பற்றி உங்கள் வார்டு அங்கத்தினராவது அல்லது விவரமறிந்த பக்கத்து வீட்டுக்காரராவது தங்களைத் தெளிவுபடுத்த முடியவில்லையானல் நகர சபை அலுவலகம் செல்ல முடிவுகட்டுங்கள். அலுவலகத்தில் குமஸ்தாக்களிடம் அணுகாதீர்கள். போதுமான பொது அறிவோ, பொறுப்போ இல்லாத இளைஞர்கள் ஆதலால், வரும் வரி கொடுப்போர்களிடமாவது இதரர்களிடமாவது வம்பளந்து கொண்டிருக்கக் கூடாது என்று கண்டிப்பான உத்தரவிட்டிருக்கிறோம். தலை வாசலிலே இருக்கும் விசாரணைக் குமாஸ்தாவை அணுகுங்கள். எது தேவை, விண்ணப்ப பாரங்கள் வாங்க, உங்கள் விஷயத்தை எந்த இலாகா கவனித்து வருகிறது என்ற விவரங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்.

பிறகு, அந்த இலாகாவின் தலைமைக் குமாஸ்தாவிடம் போங்கள். நீங்கள் என்னென்ன முறைகளைக் கையாளவேண்டுமென அவர் விளக்குவார். வருவோர்களைப் பார்க்க, விஷயங்களை எடுத்துக்கூற தலைமைக் குமாஸ்தாக்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். தலைமைக் குமாஸ்தாவும் உங்களைப் புரியவைக்க முடியவில்லையானல் ரெவினியூ ஆபீஸர் அல்லது பள்ளிகளின் சூப்பர்வைசரைப் பாருங்கள். முடிவாக அவசியமானல் மானேஜரைப் பாருங்கள். குமாஸ்தாக்களுக்கெல்லாம் உயர்தர அதிகாரி மானேஜர். அலுவலகத்திலே வேலை பார்க்கும் சிப்பந்திகள் அனைவருக்கும் மானேஜர்தான் தலைமை அதிகாரி.

இவ்வளவு விஷயங்களும் தெரிந்த பிற்பாடு எந்த முறையைக் கையாள வேண்டும் எனத் தீர்மானிக்க வேண்டும், கவுன்சில் அங்கீகாரம் தேவைப்படும் அல்லது

கவுன்சிலின் முடிவு அவசியம் பெறவேண்டிய, அதற்காக பெரும் நிதி செலவளிக்கக் கூடிய பெரும் அபிவிருத்தி விஷயமாய் இருந்தால் உங்கள் வார்டு கவுன்சிலர் அல்லது இதர கவுன்சிலர்கள், நகர சபையின் தலைவர் இவர்களை அணுகி விஷயங்களை விரிவாகப் பேசிப் புரியவைக்க வேண்டும். நிர்வாக சம்பந்தமான தவறோ, குறையோ இவைகளைச் சீர்திருத்தும் பிரச்னையாய் இருந்தால் சம்பந்தப்பட்ட இலாகாக்களின் தலைவர்கள் அதாவது சுகாதார அதிகாரி, எஞ்சினீயர், டவுன் பிளானிங் அதிகாரி மானேஜர், ரெவினியூ அதிகாரி அவர்களைப் பார்க்கலாம். அல்லது, அவர்களின் விலாசமிட்டு மனுச் செய்யலாம். அல்லது, கமிஷனருக்கு எழுதலாம். நம் நகரசபை மிகப் பெரிய நிர்வாக அலுவலடங்கியது, இதில் எந்தக் காரியமும் நடைபெருமல் இருந்துவிடாது. சில—கொஞ்சம் மெதுவாக நகரலாம். ஏதாவது அவசரமான விஷயமாயிருந்து அவசியமாகச் செய்துதான் ஆகவேண்டுமென்றிருந்தால் அவைகள் உடனடியாகக் கவனிக்கப்பட்டு விடும். சாதாரண விஷயமாய் இருந்து இருவாரங்களாகப் பதில் வரவில்லையானல் ஞாபகப்படுத்திக் கடிதம் எழுதுங்கள். (நல்ல நிர்வாகம் ஞாபக மூட்டுவதை வரவேற்கத்தான் செய்யும்) அல்லது இலாகா அதிகாரிகளை மறுபடியும் சந்தியுங்கள். அப்படியும் உங்கள் குறை தீராவிட்டால் கமிஷனரைப் பேட்டி கண்டு, உங்கள் குறைகளைத் தெரிவியுங்கள். எல்லாப் பிரிவுகளுடனும் அவர் முழு சம்பந்தமும், பொறுப்பும் உடையவர்.

இதுபோலவே, சாதாரண அற்ப விஷயங்களுக்கெல்லாம் தலைவரைத் தொந்தரவு செய்யாதீர்கள். கஷ்டப்பட்டு உழைக்கிருர். முக்கியத் திட்டங்களில் முழுக் கவனம்

அவர் செலுத்த வேண்டும். மக்களின் நன்மைக்காக, வருஷாந்திர வரவு செலவு பட்டியலிலே ஒருகண் வைத்துக் கொண்டு, பெரிய பெரிய அபிவிருத்திகளுக்குத் திட்டமிட போதுமான ஓய்வு அவருக்கு இருந்தாக வேண்டும். முறைப்படி செய்ததெல்லாம் தவறிவிட்டால், உயர்தர அப்பீல் அதிகாரம் உள்ளவர் என்ற முறையில் கவுன்சில் பற்றியோ, நிர்வாகம் பற்றியோ தலைவரைப் பேட்டி காணலாம் ; அல்லது அவருக்கு எழுதலாம். கவுன்சிலின் தலைவராதலால் கவுன்சிலிலோ, நிர்வாகத்திலோ எந்த நிமிஷமும் தலையிட்டு, நல்ல தீர்ப்பு வழங்குவதற்கும், அநியாயத்தைச் சரிப்படுத்துவதற்கும், அவரால் முடியும்.

நம் குடியரசின் காலத்திலோ மக்கள் அனைவரும் சமமே. சுதந்திரம் படைத்தவர்களும்கூட வரிகொடுப்போர் நிர்வாகத்தையும் அதன் சட்ட திட்டங்களையும் மதித்து, மற்றவர்களின் உரிமைகள் பாதிக்காதபடி, தங்கள் உரிமைகளையும், வசதிகளையும் பெற நிர்வாகத்தை அணுகினால், நிச்சயம் நிர்வாகம், உங்களின் விருப்பத்தைத் தீவிரமாகவும், உற்சாகமாகவும் நிறைவேற்றும்.

நகர சபையின் லட்சியம் ‘ சேவையே இன்பம் ’.

★

## 3. நகரசபை நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது ?

சென்னை ஜில்லா நகர சபைகளின் சட்டம் முதன் முதலாக 1920-ம் ஆண்டில் சட்டமாக்கப்பட்டு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. அதிலிருந்து அப்போதைக்கப் போது திருத்தியமைக்கப்பட்டும் வந்திருக்கிறது. இப்பொழுதுங்கூட இச்சட்டத்திற்கு ஆலோசனை கூறப்பட்ட பல திருத்தங்கள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இப்போது அமுலிலிருக்கும் 1920-ம் ஆண்டின் ஜில்லா நகர சபைகளின் சட்டத்தின் அடிப்படையிலேயே இந்த ராஜ்ய நகர சபைகளின் நிர்வாகம் தற்போது நடைபெற்று வருகிறது. தற்பொழுது சென்னை ராஜ்ய நகர்களின் நகர சபைகள், எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் கவனிக்கலாம்.

பிரதானமாக ஒவ்வொரு நகர சபையிலும் சட்ட பூர்வமான இருவித அதிகாரிகள் உண்டு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் அமைந்ததும்,

அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கபபட்ட ஒரு சேர்மன் தலைமை வகிப்பதுமான முனிசிபல் கவுன்சிலிடம், நகரசபை நிர்வாகம் பின்பற்றுவதற்கான கொள்கைகளை வகுக்கும் கடமையை ஒப்புவிக்கப்பட் டிருக்கிறது.

முனிசிபல் கவுன்சிலிடம் ஒப்புவிக்கப்பட்ட மிகப் பெரிய அதிகாரம் வருஷாந்திர வரவு செலவு திட்டத்தை தயாரித்துத் தீர்மானிப்பதே. இந்தப் பட்ஜெட் சென்னையி லுள்ள தலைமை இலாக்காக்களின் பரிசீலனைக்கும், அரசாங்கத்தின் முடிவான அங்கீகாரத்திற்கும் உட்பட்ட தாகும். பட்ஜெட்டிலே பல வழிகளிலும் வருமானத்தை மாற்றியமைக்க, நகர சபை திட்டங்களைப் புகுத்தலாம். நகர சபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பின மக்களின் விருப்பத்தைத் திருப்திப் படுத்தும் வழிகளிலே திட்ட மிட்டுச் செலவுகள் செய்யலாம். அரசாங்கத்தின் அங்கீ காரத்தின் பேரில்தான் வரிவிகிதத்தைக் கூட்டவோ குறைக்கவோ நகர சபையால் முடியும். பலதரப்பட்ட கட்டணங்கள் விதிப்பதைத் தீர்மானிக்கவும கவுன்சிலுக்கு அதிகாரம் உண்டு. சிப்பந்திகள் சம்பந்தப்பட்ட மட்டில் அதிகப்படுத்தவோ அல்லது குறைக்கவோ, ஒரு திட்டத்தை கவுன்சில் முன், நிர்வாக அதிகாரி கொண்டு வந்தால் மட்டும் இதைப் பற்றியும் கவுன்சில் முடிவு கட்ட முடியும். ஆனால் நகருக்குத் தேவையான வசதிகள் சம்பந்தப்பட்ட மட்டில், எந்த வசதி அளிக்க வேண்டு மென்றும், எது தேவையற்றதென்றும், எந்த இனத்தில் அதிகப் பணம் செலவழிக்க வேண்டுமென்றும, எந்த இனத்தில் குறைக்கலாமென்றும் முடிவு கட்டுவதிலே கவுன்சிலுக்குத்தான் முழு அதிகாரம் உண்டு. முழுக் கவனத்துடனும், விடாப்பிடியுடனும் ஒரு பட்ஜெட்டைக்

கவுன்சில் அமைத்து விட்டால், நிர்வாகத்திற்குக் கொள்கைகளை வகுத்துக்கொடுக்கும் தலைசிறந்த தன் கடமையை நிறைவேற்றியதாகும்.

பட்ஜெட்டிலே ஒரு இனத்திற்குப் பணம் ஒதுக்கப் பட்டுவிட்டால் மட்டும் நேரடியாகச் செலவழித்துவிட, நிர்வாக அதிகாரிக்கு அதிகாரம் கொடுத்துவிட்ட தாகாது. ஒவ்வொரு திட்டத்தையும் கவின்சிலின் முன் மறுபடியும் கொண்டுவந்து, எந்தச் செலவும் செய்வற்கு முன்னதாகவே கவுன்சிலின் திட்டவட்டமான அனுமதி யைப் பெற்றாக வேண்டும். சட்டத்தின் 15-வது பிரிவின் கீழ் அசாதாரணமான அவசரச் செலவுகளுக்கு கமிஷனர் நடவடிக்கை எடுத்துக் கொண்டாலொழிய கவுன்சிலின் அனுமதியின்றி எந்தத் திட்டத்திற்கும் பணம் செலவு செய்யக் கூடாது. இதன் மூலம் கவுன்சில், நிர்வாகத் தைத் தீவிரமாகக் கட்டுப்படுத்த முடியும். எந்தத் திட்டத் திற்கும், நிதி அனுமதி கோரும் பொழுதெல்லாம், நிர்வாகத்திற்குச் சரியான பொதுப் போக்கைக் கவுன்சில் காட்டவும்கூடும்.

சொத்து, தொழில் வரி விதிப்புகள் மாத்திரமல்ல, நிர்வாக அதிகாரியின் பலதரப்பட்ட நிர்வாக நடவடிக்கை களின் பேரிலும் நியாயம் வழங்கும் (அப்பீல்) அதிகாரம கவுன்சிலுக்கு உண்டு. மனுக்களின் பேரில் அனுமதியும், லைசென்சுகளும வழங்கலாம். கட்டிட விதிகளின் கீழ் சில இனங்களில் ஆக்கிரமிப்புகளுக்கும், உரிமை மாற்றுதல் களுக்கும விதிவிலக்கு அளிக்க கலெக்டருக்கும், நகர் நிர்மாண டைரெக்டருக்கும், சிபாரிசு செய்யும அதிகாரமும் கவுன்சிலுக்கு உண்டு. பலதரப்பட்ட விஷயங்களைச்

சரிபார்த்து அறிக்கை அனுப்ப, கவுன்சில் கமிட்டிகள் அமைக்கலாம்.

கூட்ட நடவடிக்கைளை ஒழுங்கு படுத்த, விதிகளை கவுன்சில் தானே வகுத்துக் கொள்ளலாம். கட்டிடங்கள், ரஸ்தாக்கள், சாக்கடைகள் முதலியவைகளின் மதிப்பீடுகள் பொதுக் குழாய்கள், தெரு விளக்குகள் அமைப்பது முதலியவைகளை அங்கீகரிக்கவோ, மறுக்கவோ போன்ற பல விஷயங்களையும் கவுன்சில் தீர்மானித்தாக வேண்டும். சிப்பந்திகளை மாற்றுவது, தண்டனை அளிப்பது போன்ற நிர்வாக அதிகாரியின் வரம்புக்குட்பட்ட சில விஷயங்கள் தவிர, நகர சபையின் காரியாலயத்தில் நடைபெறும் எல்லா விஷயங்களும் எந்தக் கட்டத்திலாவது கவுன்சிலின் முன் வந்துதான் ஆக வேண்டும். முடிவாக கவுன்சில் விரும்பினுல் கமிஷனர் அல்லது நகர சபை அதிகாரிகளுக்கு எதிராகவும், தலைவர் அல்லது உப தலைவருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து நிறை வேற்றலாம். அதிகாரம் இல்லையெனப் பொதுப்படை யாகச் சொல்லப்பட்டாலும், ஜனநாயக அடிப்படையில் உண்மையிலேயே கவுன்சில் நிறைய அதிகாரங்களைச் செலுத்தலாம்.

நகர சபைத் தலைவர் கவுன்சில் கூட்டத்தைக் கூட்டு வதுடன் அதற்குத் தலைமை தாங்கி, கூட்டத்தை நல்ல முறையிலே நடத்தித் தருவதற்கும் பொறுப்புடையவ ராவார். அரசாங்கத்திற்கோ, சென்னையிலுள்ள இலாகாத் தலைவர்களுக்கோ நிர்வாக அதிகாரி, நகர சபைத் தலைவர் மூலமாக அன்றி, நேரடியாகக் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளக் கூடாது. இதன் மூலம் அன்றாட

நிர்வாகத்தில் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வதுடன், நிர்வாகத்தின் வேலையையும் நன்கு கவனித்துக் கொள்ள நகர சபைத் தலைவரால் முடிகிறது. நகர சபைத் தலைவருக்கு நிர்வாக அதிகாரம் இல்லைதான். கவுன்சிலிலுள்ள பெரும்பான்மையினரின் தலைவர் என்ற முறையில், கவுன்சிலின் சார்பாக அவர் எப்பொழுதும் பேசலாம். தான் விரும்பும் கட்டுப்பாடு பற்றியும், விசாரணை செய்வது பற்றியும், எந்த விஷயத்தையும், நகரசபைத் தலைவர் கவுன்சிலின் முன் வைக்கலாம். தன் அந்தஸ்துக்கு ஏற்பவும், அன்றாட நிர்வாகத்தின் சில்லறைத் தொந்தரவுகள் இல்லாததாலும் மிகப் பெரிய திட்டங்களையும், கொள்கைகளையும் சிந்தித்து கவுன்சிலின் அங்கீகாரத்திற்கு நகரசபைத் தலைவரால் சிபாரிசு செய்யமுடியும்.

நகர சபை அங்கத்தினர்களும், தலைவரைப் போலவே, நகர சபையில் வைத்து எந்த விதமான தஸ்தாவேஜுகளையும் பார்வையிடலாம், ஒவ்வொரு அங்கத்தினரும் தீர்மானங்கள் கொண்டு வரலாம். நகர சபை நிர்வாகம் சம்பந்தமாக தலைவரிடம் (கமிஷனரிடமல்ல) குறுக்குக் கேள்விகள் கேட்கலாம். ஆனால், குறுக்குக் கேள்விகளுக்குப் பதில்கள் தயாரிப்பதிலே, தலைவருக்குக் கமிஷனர் உதவி புரியலாம். நகர சபை வேலைகள் நிறைவேறுவதினின்றும் அலட்சியமாயிருப்பது பற்றியோ, நகரசபைச் சொத்து விரயமாவது பற்றியோ, ஒரு பிராந்தியத்தின் தேவையைப் பற்றியோ, நிர்வாக அதிகாரியின் கவனத்திற்கு எந்தச் சமயமும் கொண்டுவரலாம். நிர்வாக அதிகாரியால் இவைகள் பரிசீலிக்கப்பட்டு, கவுன்சிலின் தீர்மானத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

முறைப்படி அமைக்கப்பட்ட கூட்டங்களிலே அங்கத்தினர்களும், தலைவரும் அமர்ந்து கொள்கைகளை வகுத்தும் தீர்மானங்களை நிறைவேற்றியும், நகரசபையை நடத்துகிறார்கள். நிறைவேற்றப்படும் தீர்மானங்கள், ஜில்லா நகர சபைகளின் சட்டத்திற்கோ, இதர சட்டங்களுக்கோ சட்ட பூர்வமான விதிகளுக்கோ, அரசாங்க உத்தரவுகளுக்கோ குந்தக மன்னியில் இருந்தால் நிர்வாக அதிகாரி அதைத் தாமதமன்னியில் துரிதமாக நிறைவேற்றி வைக்க கடமைப் பட்டிருக்கிறார், சட்டங்களுக்குப் பாதகமாக இருந்தால், கமிஷனர் அவைகளைத் தாமதப்படுத்தவும் கூடாது; வாளாவிருக்கவும் கூடாது. மேலதிகாரிகளுக்கு உடனே தெரிவித்து அவர்கள் உத்தரவையும், ஆலோசனையையும் பெற்று, அதன் முடிவைக் கவுன்சிலுக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

இப்படியாக, ஒவ்வொரு விஷயத்தையும் பிரித்து ஆராய்ந்து ஒதுக்கிக் கொண்டு வரும்போது, சில விவரங்கள் புலனாகின்றன. நகர சபையின் கடமைகளை நிறைவேற்றும் வேலையை, அதாவது தினசரி நிர்வாகத்தை கமிஷனரும், நகர சபை நிர்வாகத்தின் பல பகுதிகளின் அதிகாரிகளும் நடத்தி வருகிறார்கள். அவர்கள் நகர சபைத் தலைவருக்கோ, அல்லது தனிப்பட்ட அங்கத்தினர்களுக்கோ கீழ்பட்ட சிப்பந்திகளல்ல; ஆனால், மொத்தமாக நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட சிப்பந்திகள் நடைமுறையில், நகர சபை, அவர்களிடம் வேலை வாங்கிக் கொள்ளலாம்; அவர்களைப் பாராட்டலாம்; அல்லது குறைகாணலாம், ஆனால், இவற்றையெல்லாம் சட்டத்திற்கும், விதிகளுக்கும் உட்பட்ட, ஒழுங்கான தீர்மானங்கள் மூலமாய்த்தான் செய்ய வேண்டும். எந்த

நிர்வாகத்திலும் பலருக்கு அடங்கி நடக்க வேண்டிய ஒரு சிப்பந்தி தன்னுடைய கடமைகளைச் செவ்வனே செய்யக் கூடுமென்று சொல்ல முடியாது. ஆகையால் தான் சிப்பந்திகள் எல்லோரையும், கமிஷனர் ஒருவரின் தலைமையில் கட்டுப் படுத்தி யிருக்கிறார்கள்; அவர் ஒருவருடைய அதிகாரத்துக்குத்தான் உட்பட்டிருக்கிறார்கள்.

நகர சபையிடம் சம்பளம் பெறும் எல்லாச் சிப்பந்திகளும், கவுன்சிலின் சட்டபூர்வமான திட்டங்களை நிறைவேற்றும் கருவியாக ஒரு அணியில் நிற்கிறார்கள். இந்தக் கருவி திறமையுடன் செயலாற்ற வேண்டுமென்றால், அது நல்ல ஒழுங்கு முறையிலே கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும்; உள்ளூர், இதர விவகாரங்களில் ஒதுங்கி யிருக்க வேண்டும்; திருஷ்டி நடுநிலைமையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும் அவர்கள் கமிஷனர், இலாகா அதிகாரிகளின் உத்தரவுகளுக்கு மாத்திரம் கீழ்ப்படிதல் வேண்டும். நிர்வாகத்திற்கும் கவுன்சிலுக்கும் தொடர்புச் சங்கலியாக இருப்பவர் கமிஷனர் தான்.

கமிஷனரும் இதர அதிகாரிகளும் அன்றாடக் கடிதப் போக்குவரத்துக்களைக் கவனிக்கிறார்கள். லைசென்சுகள் வழங்குவது, குடிதண்ணீர் விநியோகிப்பது, தெரு விளக்குகள் நன்கு அமைப்பது, கக்கூசுகள் சுத்தமாக இருக்கப் பார்த்துக்கொள்வது, ரஸ்தா மராமத்துக்களைக் கவனித்துக்கொள்வது போன்ற கடமைகளை நிறைவேற்றுவதும் இவைபற்றிய குறைகளைக் கேட்டுப் பரிகாரமும் அளிக்கிறார்கள். நகர சபையின் சட்டதிட்டங்களுக்கும், விதிக

ளுக்கும் எதிராக குற்றமிழைப்பவர்களின் மீது வழக்குத் தொடர்தல், நகர சபைக்குச் சேரவேண்டிய பாக்கிகள், வரிகளை வசூலித்தல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் முதலியவை. யாருடைய விருப்பு, வெறுப்புக்குப் பயப்படாமல் கவுன்சில் அல்லது தலைவரின் குறுக்கீடின்றி தன்னுடைய யுக்தம்போல் கமிஷனரால் செய்து முடிக்கப் படவேண்டிய கடமைகள் ஆகும். ஏனென்றால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இயற்கையாக மறுபடியும் தேர்தலுக்கு, மக்களின் உதவியை நாடவேண்டியுள்ள பிரதிநிதிகளால், இவ்வேலைகள் தாட்சணியமின்றிச் செய்யமுடியாத தன்மையுடையவை.

பரஸ்பர அதிருப்தியின்றி, நிர்வாக வேலைகளை நிறைவேற்றுவதில் நிர்வாக அதிகாரிகளை நன்கு புரிந்து கொண்டு, கொள்கைகளை வகுக்கவும், கட்டுப்படுத்தவும் அதிகாரமுள்ள கவுன்சில், நன்கு சுழன்று வருவதுதான் ஒரு நிர்வாகத்தின் வெற்றிக்கு அறிகுறியாகும். இம்மாதிரியான நன்மை பயக்கும் ஒத்துழைப்பே நகர சபை நிர்வாகத்தைத் திறமையுள்ளதாக ஆக்கும். இதன் மூலம் நகரும், நகர மக்களும் மிகவும் முன்னேற்றம் அடையலாம்.

★

# 4. நகர் உணர்ச்சி

‘நகர் உணர்ச்சியா? நகர் பூராவும் இதைக்காண முடிகிறதா?’ என சமீபத்திலே ஒரு நண்பர் கிண்டலாகக் கேட்டார். நகர் பூராவுமே இந்த உணர்வு தேவை என அவர் நினைக்கிறார். இது ஒரு சாராரின் அபிப்பிராயம். மிகைப்படுத்தப்பட்டதுங்கூட! தலைப்பு பற்றிய சிலவற்றை சொல்லிவிட்டு, தங்கள் “நகர் உணர்ச்சி” பற்றி, மற்றவர்களுக்கும் எடுத்துக்கூற வேண்டுமென்ற வேண்டு கோள் விடுப்பதே இக்கட்டுரையின்நோக்கம். ஏனென்றால், நாளடைவில் ஆயிரக்கணக்கான மக்களும் ‘நகர் உணர்ச்சி’யைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பெற்று, நகர் முழுவதுமே இதன் மூலம் பயன் பெறலாம். நகரின் கூட்டு வாழ்வுக்கே நகர சபை நிற்கிறது என அனைவரும் அறிவர். அதாவது அனைவரும் ஒன்று சேர்ந்து, ஒரு பொது வாழ்வின் அமைப்பின் கீழ், ஏகக் குடும்பம்போல் வாழ்வது என்பதுதான் முனிசிபாலிட்டி. தனி ஒருவர், தனிக் குடும்பம், தனிச் சமூகம் ஒவ்வொன்றும் தனித் தனியாக வாழ வில்லை. அதாவது மூன்று லட்சத்து

எழுபதாயிரம் மக்களடங்கிய ஒரு மிகப் பெரிய குடும்பமாக கூட்டு வாழ்வில் நம் நகர சபை நிர்வாகம் அமைந்திருக்கிறது. இதரர்களுடன் ஒன்றுபட்டிராவிட்டால், மற்றவர்களுக்காகக் கைம்மாறு காட்டாவிட்டால், தன்னைப் பற்றியே எந்த நேரமும் சிந்தித்துக் கொண்டிருந்தால், குடும்ப வாழ்வு இன்பகரமாகவும், ரம்மியமாகவும் இருக்க முடியாது.

'நகர் உணர்ச்சி' என்பதை விவரித்துக் கூறுவது கொஞ்சம் சிரமமே. "Civic Conscience" என்பதைத் தமிழிலே மொழி பெயர்க்க முயற்சி செய்யப்பட்டுத் தோல்வியடைந்தது. 'Civic Conscience' என்பதற்குச் சரியான தமிழ்ப் பதம் இல்லை என்றே தோன்றுகிறது. 'நகர் உணர்ச்சி' என்றுதான் சொல்ல முடிகிறது. இந்த எண்ணத்தை வெளிப்படுத்த சரியான வார்த்தையை நம் முதியவர்கள் கொண்டிருக்கவில்லை. இதனால் நகர் உணர்ச்சி தமிழர்களிடம் எப்பொழுதும் குறைவாக இருந்தது என்று சொல்ல முடியாது. இந்த வார்த்தை விடுபட்டுப் போயிருக்கலாம், அல்லது பழங் காலத்திலே இதர சில வார்த்தைத் தொகுதிகள் மூலம் இதே அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கலாம். 'நகர் உணர்ச்சி' என்பதை 'மற்றவர்களுக்குக் கைம்மாறு செய்தல்' அல்லது இதரர்களின் வசதியையும், இன்பத்தையும் பற்றி எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருப்பது என விவரித்துக் கூறலாம். நகரின் ஒரு சிறுபான்மையின் ஓரிடத்துத்தான் தீவிர நகர் உணர்ச்சி உண்டு. இது தேவையுள்ள இதரர்களையும் தங்கள்வழிக்கு திருப்பாதது தான் இவர்களிடமுள்ள ஒரே குறை. விவரிக்க முடியாத இக்குணம்பற்றி பிரசாரம் செய்யவும், நகர் உணர்ச்சிபற்றி

இதரர்களுக்கு உபதேசிக்கவும் இவர்கள் போதுமான சிரமம் எடுத்துக் கொள்வதில்லை.

நகர் முழுவதின் நன்மைக்காக நகர் உணர்ச்சியை வெளிப்படுத்துகிறவர்களைச் சில பிரிவுகளாகப் பிரித்து விடலாம். தனிப்பட்டோராக, குடும்பங்களாக, சமூகமாக, கட்சிகளாக, அல்லது தொகுதிகளாக, ஸ்தாபனங்களாக இவைகளைப் பிரிக்கக்கூடும்.

நகர் உணர்ச்சியுள்ளவன் என்பதை, ஒரு தனி மனிதன் எப்படிக் காட்ட முடியும்? ஒரு இனம் என்ற ரீதியில் இந்தியர்களாகிய நாம் தனி சுகாதாரத்திலேதான் நாட்டமுடையவர்களாக இருக்கிறோம் என, அடிக்கடி சொல்லப்படுகிறது. அதாவது நம்மைப்பற்றியே நாம் நினைக்கிறோம். ஆனால் நாம, சுற்றுச் சுகாதாரத்தையும், நம் சூழ் நிலையையும் கவனித்தோமில்லை. தனிப்பட்டோர் சுகாதாரத்தில் கவனம் செலுத்தின அளவு, சுற்றுச் சுகாதாரத்திலே நாம் அவ்வளவு ஆர்வம் செலுத்துகிறோமா? அழுக்கு உடைகள் அணிந்தால் நண்பர்களுக்குச் செய்யும் நம் கடமையை நாம் உணரவில்லை என்று தான் அர்த்தம். நம் குடியிருப்புப் பகுதியைச் சுற்றி அசுத்தமாய் வைத்திருந்தால், மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய பணியை நாம் செய்யவில்லை; அதன் மூலம நகரின் நல்ல பிரஜையாகவும் இருக்க முடிவதில்லை. உடை பற்றியும், சொந்த சுகாதாரம் பற்றியும் இருக்கட்டும். வியாதியைப் பற்றி என்ன? ஒருவருக்குச் சர்ம வியாதி இருப்பதாக வைத்துக் கொள்வோம். தன்னைத்தானே குணப்படுத்திக் கொள்ள அவர் சிரமம் எடுத்துக் கொள்வது என்பது மாத்திரம் பிரச்னையல்ல. தன்னுடன் சேர்ந்து பழகுபவர்களிடம் இவ்வியாதி தொத்திக்

கொள்ளக்கூடாது என்று பார்த்துக் கொள்வதிலே மிகவும் எச்சரிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

காச நோயால் பாதிக்கப்பட்டவர், நகர் உணர்ச்சியுள்ளவராய் இருந்தால், அடுத்தவர்களுக்கும் இவ்வியாதி பரவாதபடி, நகரை விட்டே நீங்கி தனிமையிலே வசித்துக் கொள்வார். இப்படிப்பட்ட விஷயங்களிலெல்லாம் நாம் இதரர்களையே மனதில் கொள்ள வேண்டும். இப்படியெல்லாமிருந்தால் தனிப்பட்ட நாம், நகர் உணர்ச்சியுள்ளவர்கள் எனக் கூறிக் கொள்ளலாம். நம் சொந்த கக்கூசையும், ஸ்நான அறையையும் நாம் உபயோகிக்கும் விதத்தை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். நல்ல முறையிலே நாம் உபயோகப்படுத்தினல், நம் அடுத்த வீட்டுக்காரர்களுக்குத் தொந்திரவே இராது. பக்கத்து வீட்டுக்காரர் ஒரு புது வீடு கட்டுவதைப்பற்றி சமீபத்திலே ஒரு பேராசிரியர் புகார் செய்தார். கட்டிடம் நகர சபை விதிகளுக்குப் பாதக மன்னியில் இருந்தாலும் பேராசிரியர் வீட்டின் முன் அறையை நோக்கி அடுத்த வீட்டுக்காரரின் கக்கூசு அமைக்கப்பட்டிருந்தது! தன் அண்டை மனிதருக்குக் காட்டப்பட்ட சலுகை எப்படி இருக்கிறது?

கக்கூசு, ஸ்நான அறைத் தண்ணீரை நீக்குவதை எடுத்துக் கொள்வோம். இஷ்டப்பட்ட இடத்திலெல்லாம் இத்தண்ணீரை விட்டுவிடுகிறோம். விஷயமறிந்தவர்களைக் கலந்து கொண்டு பாதாளச் சாக்கடை முறைகளை அமைத்துக் கொள்ள வேண்டும். இது இயலாவிட்டால், கக்கூசைக் கழுவி விடும் தண்ணீருடன், ஸ்நான அறைத் தண்ணீரையும் கலந்து, தயவு செய்து வெளியில் விட்டு விடாதீர்கள். இது சம்பந்தமாக தினமும் எண்ணற்ற புகார்கள் குவிகின்றன. மூன்று லட்சத்து எழுபதாயிரம்

மக்களும் தன் பக்கத்திலுள்ளவர்களைப் பற்றியும் நினைத்து நடவடிக்கைகளை அவர்களுக்கேற்பவும் அனுசரித்து வந்தால் உண்மையிலேயே மதுரை, வசிப்பதற்கு மிகவும் இன்பகரமான இடமாக இருக்கும். அடுத்தவர்களின் முகத்திற்கெதிரே நாம் எப்படி கொட்டாவி விடுகிறோம், இருமுகிறோம்! தனிப்பட்டவர்களின் நடவடிக்கைகளைப் பற்றி விவரித்துக் கொண்டு வரும்பொழுது இன்னொரு அருவருக்கத்தக்க வழக்கமும் ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது கண்ட இடத்தில் துப்புதல், சினிமாப் படங்களின் மூலம், பிரசார வண்டி மூலம், பத்திரிகை மூலமும் போதுமான விளம்பரம் செய்தும் பயனில்லை. காரியாலயங்களில் பொது மக்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் எங்கிருந்தாலும் அங்கெல்லாம் அவைகள் மேல் துப்பி சுவரையே உருமாற்றி விடுகிறார்கள். சினிமாக் கொட்டகைகளிலே துப்புவதின் பலனைக் கவனியுங்கள். இந்தக் கெட்ட வழக்கம் மிக இலகுவில் நம்மால் கட்டுப் படுத்த முடியும். நிற்க,

பல இடங்களில் தினந்தினமும் சிறுசிறு ஆக்கிரமிப்புகள் பெருகி வருவதையும் நாம் பார்க்கிறோம். தன் கடைக்கு முன்னால் உள்ள, ரஸ்தாவின் சிறு பாகத்தைத் தனதாக்கிக் கொள்ள ஒவ்வொரு மனிதரும் விரும்புகிறார். பொதுமக்களை கவர்ச்சிப்பதற்காக உணவு விடுதிக்காரர்கள், தங்கள் கடைகளுக்கு முன்னால் சைக்கிள் நிறுத்துமிடங்களைப் பொருத்தி வைத்து பாதசாரிகளுக்கு இடையூறு செய்கிறார்கள். ரஸ்தாவின் அகலம் குறைந்து போனாலும், இந்த சுயநல மிகுந்த நகர மக்கள் கவலைப்படுவதில்லை. சில ரஸ்தாக்களில், தூசி படியா தவாறு, ஏராளமான செலவில் சிமிண்டுத் தகட்டுக்

கற்கள் பாவப்பட்டிருக்கின்றன. மக்கள் இதன்மேல் நெல் உலர்த்தவும், சாணத்தைத் தட்டவும் செய்கிறார்கள். கூட்டங் கூட்டமாக உட்கார்ந்து கொள்கிறார்கள். சிமிண்டு பசுக்கொட்டங்கள் போல, சிமிண்டு ரஸ்தாக்களிலே கால் நடைகளை கட்டி விடுகிறார்கள்.

மணல் நிரப்பின தகரப் பீப்பாய்களிலே, கம்பங்களைப் பொருத்த வேண்டுமென விதிகள் இருந்தபோதிலும், தற்காலிகமாகப் போடும் கல்யாணம் இதர வகைப் பந்தலுக்காக, ஈவிரக்கமின்றி ரஸ்தாக்களிலே குழிகள் தோண்டி, அதில் கம்பங்கள் நிறுத்துகிறார்கள். அடிக்கடி இப்பந்தல்கள் பக்கங்களை மறைத்துவிடுவதால் போக்குவரத்து, சாதாரணமாக நடப்பதற்கு இடைஞ்சலாக ஏற்படுகிறது. இன்னும் சில சிந்தனையற்ற மக்கள் ரஸ்தாக்களிலே விறகை உடைத்து ரோட்டைச் சிதறடித்து விடுகிறார்கள்.

மூன்று லட்சத்து எழுபதாயிரம் மக்களும் இம்மாதிரியே சமுதாயத் தீங்கான செயல்களைப் புரிந்து கொண்டே வந்தால் நகர சபையின் 2500 சிப்பந்திகளால் இதைச் கட்டுப்படுத்திவிட முடியுமா? ஒவ்வொரு தனி மனிதனுக்கும் நகர் உணர்ச்சி யிருந்தாலொழிய இது மனித முயற்சியால் முடியாது. 24 மணி நேரமும் 3,70,000 மக்களுக்கு 3,70,000 போலீஸ்காரர்களை அமர்த்தினால் ஒரு வேளை முடியலாம்! நகர் உணர்ச்சியானது, படிப்பின்மூலம் பெறுவதைக் காட்டிலும் பண்பாட்டின் மூலம் தான் அதிகம் பெறமுடியும். பிரசாரத்தின் மூலமும் இதைக் கொஞ்சம் நகரச் செய்யலாம். குடும்பத்துடன், உறவினர்களுடன், நண்பர்களுடன் நாம் சம்பாஷிக்கும் சமயங்களிலெல்லாம் இது சம்பந்தமான எண்ணங்களையும், அபிப்பிராயங்

களையும் தினந் தினமும் பரிமாறிக் கொண்டாலொழிய நகர் உணர்ச்சி வளர்ச்சியடைவது என்பது இயலாத காரியமாகும்.

சிலருக்கு எதிராக வழக்குத் தொடர்வதும், சட்ட பூர்வமான நடவடிக்கைகள் எடுப்பதும் ஒரு வகையான விளம்பர சாதனந்தான் என்பதில் சந்தேகமில்லை. முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் ஒரு நாட்டிற்கு இது சரியான முறையல்ல. மேலும், தவறிழைக்கிற ஆயிரக்கணக்கான மக்களுக்கும் தண்டனையளிக்கும் வேலை அதிகச் சிரமத்தைக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

ரெவினியூ கிஸ்தி, வருமான வரி போல அரசாங்கம் விதிக்கும் எல்லா வரிகளையும் தாமதமின்றிச் செலுத்தப் படுவதை அனைவரும் அறிவோம். ஆனால், நம் முனிசிபல் வரிகளை வசூலிப்பதில் மிகவும் சிரமமடைகிறோம். 'நகர சபை வரிகளைக் கொடுப்பதினின்றும் தப்பித்துக்கொள்வது முறை கேடல்ல' என்று ஒரு நீதிபதி ஒரு காலத்தில் சொன்னார்! நகர சபை வரி வசூல் குமாஸ்தா, நகர சபை வரிகளை வசூலிக்க அணுகினால், 'நாளை வா' 'நாளைக் கழித்து வா' என்றே மக்கள் நாட்களைக் கடத்துகிறார்கள். இப்படி இருந்தால் எப்படி நகர சபையை நிர்வகிக்க முடியும்? உங்கள் ரஸ்தாக்களை எப்படிச் சுத்தப் படுத்த முடியும்? குழாயைத் திருப்பினவுடன் எப்படித் தண்ணீர் பெற முடியும்? விசையைத் தட்டினவுடன் எப்படி விளக்கு எரிய முடியும்? தனிப்பட்டவர்கள் என்ற முறையில் அனைவரும் எல்லா விஷயங்களையும் சிந்தித்துச் செயலில் இறங்க வேண்டும்.

குடும்பம் என்ற ரீதியில் வீடுகளைச் சுத்தமாகவைத்துக் கொள்ளப் பிரயத்தனப்பட வேண்டும். தினமும் தங்கள்

வீட்டின் எதிரேயுள்ள ரஸ்தாவின் ஒரு பகுதியை எப்பொழுதும் சுத்தமாகவே வைத்திருக்கும் டச்சு நாட்டு மாதர்களின் உதாரணத்தை நாமும ஏன் பின் பற்றக் கூடாது? நம் வீட்டின் சுற்றுப்புறத்தைக் குறித்து நாம் சிரத்தை எடுத்துக்கொள்ளுவதில்லை. பாதாளச் சாக்கடை இல்லாத இடங்களில், குளித்த தண்ணீரைக் கக்கூசுத் தண்ணீருடன் கலந்துகொள்ள விடுவதன் மூலம், நிறைய தொந்தரவுகளைத் தருவித்துக்கொள்வதைக் காட்டிலும், அந்தத் தண்ணீரை நம் தோட்டத்திற்கு ஏன் பாய்ச்சிக் கொள்ளக்கூடாது? அல்லது வாழை மரங்களுக்கு ஏன் பாய்ச்சக் கூடாது? நம் வீட்டிற்குள்ளிருக்கும் சாக்கடையைப் பற்றித்தான் நாம் நினைக்கிறோம். ஆனால், நம்மில் பலர் நம வீட்டிற்கு முன்னால் உள்ள சாக்கடையைப் பற்றி நினைக்கிறோமில்லை. அடிக்கடி குப்பைகளை இதனுள் எறிகிறோம். நம் மனைவிகளும், பெண் குழந்தைகளும் எச்சல் இலைகளை, அடுத்த வீட்டு முற்றத்தில் போடுகிறார்கள். குடும்பத்தின் சிறு பிள்ளைகளெல்லாம் அங்கு தான் மல ஜலம் கழிக்கிறார்கள். கக்கூசை உபயோகிக்க அவர்களைப் பழக்க வேண்டும். தெருக்களைக் கக்கூசாக உபயோகிக்கும் இந்தக் கெட்ட வழக்கம் எத்தனையோ ஆண்டுகளாக, பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்தே வருகிறது. இதை எப்பொழுது நாம் தடுத்து நிறுத்தப் போகிறோம்?

நம்முடைய பழங்கால நாகரீகத்தைப்பற்றியும், இறந்த காலப் புகழைப்பற்றியும பேசிக்கொண்டிருப்பதிலும், கனவு கொண்டிருப்பதிலும், என்ன பயன்? இன்றைய நிலை என்ன? நம் சுற்றத்தாரிடம் சொல்லாவிட்டால், குடும்பத்தாரிடம் கூறாவிட்டால், நண்பர்களிடம் பேசாவிட்டால்,

முன்னேற்றம் என்பது இருக்கமுடியாது. நெருப்பு பிடிக்காமல் தடுக்க, முன் எச்சரிக்கையாக வீதிகளில் கீத்துக் கொட்டகைகள் போடுவதைத் தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இரவோடு இரவாகத் தங்கள்வீடுகளில் திருட்டுத்தனமாகக் கீத்துக் கொட்டகைகள் அமைப்பதில் எத்தனை படித்த குடும்பங்கள் கூட ஈடுபடுகின்றன!

நம்மை நடவடிக்கை எடுக்க, நிர்ப்பந்திக்கும அளவுக்கு தங்கள் குடியிருப்பின் முன்னால், அசுத்தமாக வைத்திருக்கிறார்கள். எத்தனை குடும்பங்கள் கால் நடைகளுடன் தூங்குகின்றனர்! வீட்டிற்குள்ளே கால் நடைகளைக் கட்டி விடுகிறார்கள். சுற்றுப்புறத்தை அசுத்த மாக்குகிறார்கள். சுற்றியுள்ள அனைவர்களின் தூக்கத்தையும் கெடுக்கும அளவிற்கு, இரவு வெகு நேரம் வரைக்கும, எண்ணற்ற குடும்பங்கள், தங்கள் ரேடியோக்களைத் திருப்பி வைத்திருக்கின்றனர். கஷ்டத்தோடு கிடைக்கும் விலை மதிப்பற்ற குடி தண்ணீரைச் சிக்கனமாக உபயோகிக்குமபடியும, குடி தண்ணீர் குழாய்களுக்கடியிலே பாத்திரங்களை அலமபு வதையும், குளிப்பதையும் நிறுத்துமபடி போதுமான அளவு பிரசாரம் செய்திருக்கிறோம. துண்டுப் பிரசுரஙகள விநியோகித்திருக்கிறோம். இருந்தும் என்ன? ஒரு பயனும் காணோம். தினமும் ஆயிரக்கணக்கானவர்களின் மேல் வழக்குத் தொடர முடியுமா? அதற்கு சிப்பந்திகளுக்கு எங்கு போவது? இம்மாதிரி நிகழ்ச்சிகளையெல்லாம் மக்கள் நன்கு ஆராய்ந்து நகர் உணர்ச்சியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கிரகித்துக் கொள்ள வேண்டும்.

கட்சிகள் சம்பந்தமாக எடுத்துக் கொண்டால், தேர்தல் சமயத்தில் அபேட்சகர்களின் ஆதரவாளர்களும,

பொது மக்களும் பொதுக் கட்டிடங்களின் சுவர்களையே உருமாற்றி விட்டார்கள். இவ்வாறு செய்துதானா தேர்தலில் போட்டி நடத்த வேண்டும்! சமீபத்திலே அரை லட்சத்திற்கும் அதிகமான செலவு செய்து மராமத்துச் செய்துள்ள எல்லாப் பொதுக் கக்கூசுகளின் வெளிப்புறமும் இம்மாதிரி நடவடிக்கைகளால் பாழாக்கப்பட்டு விட்டன.

மற்றொரு விஷயம். நகரசபை மைதானங்களிலே பொதுக்கூட்டங்கள் நடத்த, அனுமதி கேட்டு அநேக மனுக்கள் வருகின்றன. ஆனால் இரவு 10 அல்லது 10-30 மணிக்குள் கூட்டத்தை முடித்துவிட வேண்டும் என்ற நிபந்தனையை விதித்தவுடன் எவ்வளவு கோபம் கொள்கிறார்கள் தெரியுமா? நள்ளிரவுக்குப் பின்னும் மைக்கின் மூலம் பேச்சாளர்கள் இரைந்து கொண்டிருக்கின்றனர். அதன் பின்பும், கேட்டுக்கொண்டிருக்கும் ஆயிரக் கணக்கானவர்களுக்குத் துன்பம் தரும்படி, இசைத் தட்டுகளையும் ஒலிபரப்பி விடுகின்றனர்.

கல்லூரிகள், பள்ளிகள் சம்பந்தமாக பேராசிரியர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் ஒரு வேண்டுகோள்: அதாவது தங்களிடம் பயிலும் இளம் மாணவர்களுக்கு வளர்ச்சியடையாத நகர் உணர்ச்சியைக் கொஞ்சங் கொஞ்சமாகப் புகுத்துமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். பள்ளிக்கூடங்களின் வெளிப்புறங்களிலும், சில சமயம் பொதுப் பூங்காக்களிலும், பள்ளிமாணவர்கள் வரிசையாக நின்று ஆபாசஞ் செய்வதை அடிக்கடி பார்க்கிறோம். போக்குவரத்து திடல்களின் மேலுள்ள புல்லையும் இளஞ் சாலை மரங்களையும் சிலர் கெடுத்துவிடுகின்றனர். மேலும்

போக்குவரத்து உணர்ச்சி அவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறதா ?

சமூகம் என்ற ரீதியில் எடுத்துக்கொண்டால் தருமம் செய்வதைச் சிதறவிடாமல் ஒன்று படுத்திச் செய்ய வேண்டும். தரும ஸ்தாபனங்களுக்கும், ஏழை விடுதிகளுக்கும் கூட்டு முறையிலே ஆதரவு காட்ட வேண்டும். ஒழுங்கு முறையில்லாத, தனிப்பட்ட தருமத்தினால் சமுதாயத்திற்கு ஒரு பயனும் ஏற்படாது. ஒரு லட்சம் ரூபாய்க்குமேலும் செலவு செய்து நகரசபை ஒரு 'ஏழைகள் விடுதி' அமைத்திருக்கிறது. வீடற்ற எட்டு நபர்களுக்கு ஆதரவு தர, சுமார் ஐயாயிரம் ரூபாய் செலவில் பிளாக்குகள் கட்டித்தர எத்தனை மக்கள் முன் வந்திருக்கிறார்கள்? ஒருவருமில்லை. பஸ் பிரயாணிகள் ஒதுங்கும் 'ஷெல்ட'ரின் விலை ரூ. 420 தான் ஆகிறது. இதற்கு நன்கொடை அளிக்குமாறு நகர சபை, மக்களைக் கேட்டிருக்கிறது. பெரிய நகரத்திலே இருபதுபேர் மாத்திரம் இதற்கு நன்கொடை அளித்திருக்கின்றனர். இம்மாதிரி பொதுப் பணியிலே நாம் ஒன்று சேர்ந்து செயலிலிறங்காவிட்டால் நமக்கு நகர் உணர்ச்சி எங்கிருக்கிறது ?

முடிவாக, நகர் உணர்ச்சியானது உடன் பிறப்பல்ல என்று சொல்லிவிடலாம். கல்வியினால்கூட நகரஉணர்ச்சி நமக்கு வந்துவிடாது. பிறக்கும்பொழுது அது நம்மிடமில்லை. ஆனால் படிப்படியாகத்தான் பல வழிகளிலும், இதை நாம் பெறவேண்டும். மற்றவர்களுக்கு நாம் உபதேசிக்க வேண்டும். அவர்களும் இதை உரித்தாக்கிக் கொள்வார்கள். எந்த முனிசிபல் விஷயத்திலும் செய்கையில் இறங்குவதற்குமுன் நாம் சிந்திக்க வேண்டும்.

பக்கத்து வீட்டுக்காரர்களைப் பற்றிய எண்ணமும், சுற்றுப்புறத்தைப் பற்றிய நகர் உணர்ச்சி எண்ணமும் நம்மிடமிருப்பதற்கு ஆணானாலும் பெண்ணானாலும், முதியவர்களானாலும், இளைஞர்களானாலும், ஏழைகளானாலும், பணக்காரர்களானாலும், கஷ்டப்பட்டு முயல வேண்டும்.

★

## 5. நகரவாசியின் கடமை

நம்முடைய ராஜ்யத்தில் தமிழ் வருஷப் பிறப்பும், தெலுங்கு வருஷப் பிறப்பும் வருகின்றன. இதைத் தவிர, உலகம் பூராவுக்கும் பொதுவாக 'புது வருஷம்' என்று வழங்குகிற ஜனவரிமீ 1உ வருகிறது. இதற்கு மத சம்பந்தமான அர்த்தம் ஒன்றும் கிடையாது. ஆனால், இந்தத் தேதி நிர்வாக வருஷத்தின் ஆரம்ப தினமாகக் கொள்ளப்படுகிறது.

இந்தப் புதுவருஷ தினத்தன்று, எல்லா தேசத்தவர்களும், வகுப்பினர்களும் குடும்பங்களும், தனி நபர்களும், கடந்துசென்ற வருஷத்தின் நிகழ்ச்சிகளையும், பலன்களையும் சிந்தித்துப் பார்த்து, வருகிற வருஷத்தில் நிறைவேற்றி வைக்கவேண்டியகருத்துக்களையும், காரியங்களையும் ஆலோசித்து, நிர்ணயித்துக் கொள்வது சகஜமாய் இருக்கிறது. இவற்றிற்கு நடைமுறையில் 'புது வருஷத் தீர்மானங்கள்' என்று பெயர். இந்த வருஷத்தில் தங்கள் சமூக வாழ்க்கையில் பொது ஜனங்கள் கடைப்பிடிக்க வேண்டிய

இம்மாதிரியான 'பிரதிக்ஞைகள்' சிலவற்றை நகரத்தின் நன்மையைக்கருதிக் குறிப்பிடலாம்.

நகரத்தைச் சுத்தமாக வைத்திருப்பது எல்லா நகர மாந்தர்களின் குறிக்கோளாக இருப்பதால், காலை முதல் இரவு வரை, நாம் சஞ்சரிக்கும் இடங்களிலெல்லாம் அசுத்த மாக்காதிருப்போம் என்று சங்கல்பம் செய்து கொள்வோ மாக. ஏதாவது அசுத்தம் ஏற்பட நேருமானால் அதற் கென்று ஒதுக்கப்பட்ட இடத்திலேதான் செய்யவேண்டும்; அப்போதுதான் நகரசுத்தி சிப்பந்திகள் அதை அப்புறப் படுத்த ஏதுவாக இருக்கும். ஆகையால் எல்லாக் குப்பை களும், அசுத்தங்களும், எச்சில் இலைகளும் குப்பைத் தொட்டிக்கே போகட்டும். நாம் உமிழ வேண்டுமானால் எச்சல் படிக்கத்தை உபயோகப்படுத்த வேண்டும். மிருகங்களைப் போல் பாதை ஓரங்களிலும், சந்து பொந்து களிலும் மல ஜலம் கழிக்காமல் இருப்போமாக. கக்கூஸ் களில் மட்டுமே மல ஜலம் கழிக்குமாறு, நமது குழந்தை களைப் பழக்குவோமாக. பலருக்கும் மத்தியில் காறி உமிழ்தல், மூக்கைச் சிந்துதல் முதலிய துர்ப்பழக்கங்கள் ஏதும் நம்மிடம் இருந்தால் அவற்றை அறவே ஒழிப்போ மாக.

ஒவ்வொரு வீட்டின் உரிமையாளரும், அந்த வீட்டா ருக்குப் போதுமான அளவில், கக்கூஸ் கட்டியிருக்க வேண்டு மென்று சட்டம் கோருகிறது. மதுரையில் இன்னும் 5091 வீடுகளுக்கு கக்கூஸ் வசதி ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. வசதியற்ற இடங்களில் அவசியம் கக்கூஸ் கட்ட வேண்டுமென்று கட்டாயப் படுத்தப் படு கிறது. கக்கூஸ் இல்லாத வீடுகளே இல்லை என்ற நிலை

ஏற்பட்டால் பொது கக்கூஸ்களில் நெருக்கடி குறையும். இவை, முக்கியமாக வெளியூரிலிருந்து வரும் பிரயாணிகள், யாத்திரீகர்களுக்கென்றே ஏற்பட்டவை. நாம் அவற்றை உபயோகப்படுத்த நேரிட்டால், ஒழுங்கான முறையில் உபயோகிப்போமாக. யாரும் உள்ளே நுழைய முடியாத அளவுக்கு, கக்கூஸ்களில் உள்ளும வெளியிலும் எல்லா இடங்களிலும், அசுத்தம் செய்துவிடாமல் சரியான முறையில் அவற்றை உபயோகப்படுத்தும்படி, மற்றவர் களுக்கு அறிவுறுத்தும்படியான பிரசாரத்தையும் நாம் மேற்கொள்வோமாக.

கல்வியறிவில்லாத, விவரம் தெரியாத ஏழைத் தாய்மார்கள் எல்லோரையும் பிரசவத்துக்கு நம்முடைய இலவச பிரசவ ஆஸ்பத்திரிகளுக்குப் போகுமாறு வற்புறுத்துவோமாக. ஒரு தேசத்தின் வருங்காலம் அதன் குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பொறுத்திருக்கிறது. நம் நாட்டில் சிசுக்களின் மரண விகிதம் அதிகமாய் இருக்கிறது; பிரசவ காலத்தில் கைதேர்ந்த மருத்துவ உதவி கொடுப்பதின் மூலம், இந்த மரணத்தைக் குறைப் போமாக.

நகரத்தின் தெருக்களும், ரஸ்தாக்களும் விலையுயர்ந்த பொதுச் சொத்துக்கள் ; அவை பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் சமமாக உபயோகப்படுகின்றன. அவற்றை நாம் ஆக்கிரமித்து, நமது சொந்த, சுயநல காரியங் களுக்கு உபயோகிக்காமல் இருப்போமாக. ரஸ்தாக்களில் விறகுகளைப் போட்டு வெட்டியும், பந்தல் முதலியவை களுக்காக குழிகள் தோண்டியும், அவற்றைப் பாழாக்காமல் இருப்போமாக. எல்லாவற்றிற்கும் மேலாக, நம் வீட்டுக் குப்பைகளையும், வேண்டாத மண், செங்கல் முதலிய

வற்றையும் ரஸ்தாக்களில் போட்டுக் குவித்து, அசுத்தப் படுத்தாமல் இருப்போமாக.

நமக்கு விநியோகம் செய்யப்படும் குடி தண்ணீர் மிகவும் விலை உயர்ந்தது. அநேக நகரங்களிலும், ஆயிரக் கணக்கான கிராமங்களிலும், பாதுகாக்கப்பட்ட இம்மாதிரி சுத்தமான குடிதண்ணீர் கிடைப்பதில்லை. இருப்பினும் இம்மாதிரி குடிதண்ணீர் நம் நகரில் போதுமான அளவுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே இனி இக் குடி தண்ணீரில் குளிப்பதோ, துணிகள் துவைப்பதோ, பாத்திரங்கள் விளக்குவதோ இல்லை என்று தீர்மானித்துக் கொள்வோமாக. ஒழுகுகின்ற குழாய் ஒன்றை நாம் எங்கேனும் கண்டால், சிரத்தையுடன் உடனே எஞ்ஜினி யருக்கு, அல்லது கமிஷனருக்கு டெலிபோன் மூலம் அறிவிப்போமாக. குடி தண்ணீரைத் தோட்டத்துச் செடிகளுக்குப் பாய்ச்சும் சமூகத் துரோக காரியத்தை நாம் ஒருபோதும் செய்யாமல் இருப்போமாக.

நிழல் தரும் ரஸ்தா ஓரத்து மரங்களும், கண்ணுக் கினிய பொதுப் பூங்காக்களும் அழகின் சின்னங்கள்; அவை நகர மாந்தர்களின் பெருமைக் குறியவை. சமூக விரோதி களாலும், கால் நடைகளாலும் அழிக்கப்படாமல் அவற்றை நாம் பாதுகாப்போமாக.

சிற்றுண்டிசாலை அல்லது திரைப்படக் காட்சிசாலைக்கு விஜயம் செய்யும்போது நாம் அங்கு சரியானபடி நடந்து கொள்கிறோமா என்று ஆலோசிப்போமாக. நாம் அங்கு இருக்கும்போது எதையும் கண்ட இடங்களில் எறிந்தோ, உமிழ்ந்தோ ஆபாசப்படுத்தாமல் இருப்பதுடன் சுத்தமான பழக்கங்களையே கைக் கொள்வோமாக.

கட்டிட விதிகளும், நகர அமைப்பு விதிகளும் பொது நன்மையை உத்தேசித்தும், காலக் கிரமத்தில் எல்லோருக்கும் நன்மையளிப்பதற்குமே ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் உணருவோமாக. வீடுகளில் நெருக்கடியையும் தூசுகளின் அசுத்தத்தையும் குறைப்பதற்காகவும், அதிகமான வெளிச்சத்தையும், காற்றையும் தருவதற்காகவும், எல்லா நகர மாந்தர்களும் அவர்களின் பரம்பரையினரும் நல்ல நிலைமையில் வாழ்வதற்காகவும், இவ்விதிகளுக்கு நாம் கீழ்ப்படியவேண்டும். நகரசபையின் உத்திரவுபெறாமல் நம்முடைய வீட்டை மாற்றி யமைப்பதோ, புதிதாகக் கட்டுவதோ இல்லை என்று தீர்மானித்துக் கொள்வோமாக.

கடைசியாக, நகர ஆட்சியும், பொதுஜன சேவையும் சரிவர நடைபெறுவதற்கு ஏதுவாக நகர சபைக்குச் சேர வேண்டிய எல்லாவிதமான வரிகள், லைசன்ஸ் கட்டணங்கள், இதர தொகைகள் முதலியவற்றைக் குறித்த காலத்துக்குள் செலுத்தி விடுவோமாக. நகர சபையால் எந்நேரத்திலும், ஓய்வின்றி, ஓசையில்லாமல் செய்யப்பட்டு வருகிற ஜீவாதார ஊழியங்கள்—தண்ணீர் விநியோகம், நல்ல ரஸ்தாக்கள், குப்பை—கக்கூஸ் சுத்தம் செய்தல், விளக்குவசதி, வைத்திய உதவி, கல்வி முதலியவைகளை நாம் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வோமாக. இந்த சேவைகளில் ஏதாவதொன்று, எப்போதாவது, எக்காரணத்தாலாவது, கொஞ்ச நேரத்துக்குத் தடைப்படும்போதுதான் அதனதன் அவசியம் நமக்கு நன்கு புலனாகிறது. நகர மாந்தர்கள் கொடுக்க வேண்டிய தொகைகளை அவ்வப்போது செலுத்தி விட்டாலொழிய இத்தக் காரியங்களெல்லாம் தங்கு தடையின்றி எப்படி நடைபெறக்கூடும்?

ஒரு பட்டதாரியாகவோ, எஞ்ஜினீயராகவோ, வக்கீலாகவோ, டாக்டராகவோ ஆவது மிக எளிது. அல்லது ஒரு வியாபாரத்தை ஆரம்பித்து, வளர்த்து உயர்ந்த நிலையை அடைந்து விடலாம். அல்லது அரசியல் கலையில் கைதேர்ந்தவராகி விடலாம். ஆனால், ஒருவர் தன் அன்றாட வாழ்க்கையில் ஒரு 'நல்ல நகரவாசி'யாக விளங்குவது மிகவும் சிரமம்.

★

# 6. ஆக்கிரமிப்புகள்

'ஆக்கிரமிப்பு' என்பதன் அர்த்தம் மற்றவர்களின் நிலத்திலும், உரிமைகளிலும் இடையிற் புகுந்து அபகரித்துக் கொள்ளுதல்' என்பதாகும். நில சம்பந்தமான ஆக்கிரமிப்பு, திட்டமிட்டுச் செய்யும் திருட்டே தவிர வேறல்ல. தனிப்பட்டவர்களின் சொத்துக்களில் ஆக்ரமிப்புச் செய்தால் நகர சபைக்குச் சம்பந்தமில்லைதான். வேண்டுமானல் சொந்தக்காரர்கள் நீதி மன்றங்களில் இதற்குப் பரிகாரம் தேடிக்கொள்ளலாம். ஆனல், தனிப்பட்ட தெருக்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்துவதற்குப் போதுமான அதிகாரங்கள் நகரசபைக்கு உண்டு. பொது ரஸ்தாக்களையும், தெருக்களையும், சந்துகளையும் பாழ்படுத்துகிற, சமுதாயத்திற்கு விரோதமான, விடாப்பிடியாய்த் தொத்திக்கொண்டிருக்கும் தீங்கான ஆக்கிரமிப்பைப் பற்றியதே இந்தக் கட்டுரை.

இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் பகிரங்கத் திருட்டாக இருந்தபோதிலும், இதிலே குற்றமிழைத்திருக்கும் கற்ற, கண்ணியம்வாய்ந்த ஆயிரக்கணக்கான நகரவாசிகள்

'திருடர்கள்' என அழைக்கப்பட்டால், அவர்கள் திடுக்கிடுவதுடன் கோபமும் கொள்கிறார்கள்! இந்நகர வாசிகள் இதர வகைகளிலே மாசற்றவர்களாக இருக்கலாம். பக்திமான்களாகவும், தங்கள் குடும்பங்களைச் சிறந்த முறையிலே பேணுபவர்களாகவும், தன்னுடைய தினசரிப் பணிகளிலே பெருமையுடன் ஈடுபடுபவர்களாகவும் இருக்கலாம். யாரிடமிருந்தாவது, ஒரு தீப்பெட்டியை யாவது, சிறு பென்சிலையாவதுகூட களவு செய்வதுபற்றி நினைப்பதற்கே பயப்படுவார்கள். ஆனால் அவர்கள் மறுபடியும், மறுபடியும் பிடிவாதத்துடனும், திட்டத்துடனும் பொதுத் தெருக்களையும், சந்துகளையும் ஆக்கிரமித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

மனச்சாட்சி உறுத்தாமல், பொது மக்களுக்குச் சொந்தமான நிலத்தைச் சிறுகச் சிறுகத் தங்கள் சொத் தாக்கிக்கொள்வதன் மூலம் பொது மக்களைக் கொள்ளை யடிக்கிறார்கள், களவாடப்பட்ட நிலத்தை, அவர்களிட மிருந்து மீட்க நகரசபை சிப்பந்திகள் முயன்றால், அவர்கள் மீது குரோதம் கொள்வதுடன், உக்கிரத்துடன் அனைவருமெ திரண்டு, தங்கள் நண்பர்களின் ஆதரவையும் திரட்டி, கவுன்சிலையும், கலெக்டரையும் தொந்தரவு செய்து, முடிவிலே நீதி மன்றங்களுக்கு ஓடவும் செய்கிறார்கள். பொதுத் தெருவைத் தெரியாத்தனமாக ஆக்கிரமித்துக் கொண்ட ஒரு நல்ல நகரவாசி, தானாகவே அந்த ஆக்கிர மிப்பை அப்புறப் படுத்திக்கொண்டு, நகர சபையிடம் வருத்தம் தெரிவித்துக் கொண்டால்தான் உண்மையான 'ராம ராஜ்யம்' வந்ததாக ஆகும்.

நகர சபைத் தெருக்கள், ரஸ்தாக்கள், சந்துகள் எனக் கூறிக்கொள்பவை உண்மையிலேயே 'நகர சபையின்

உடைமைகள்' அல்ல என்பதை அநேகர் அறியார். இவை அரசாங்கத்திற்குச் சொந்தமானவையே. ரஸ்தாக் களுக்கு மாத்திரம் உபயோகித்துக் கொள்வதற்காக நகர சபையிடம் இவை ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வளவுதான்! பிச்சைக்காரன் முதல் கவர்னர் வரை எந்தப் பொது மகனுக்கும், அதை ரஸ்தாவாக உபயோ கித்துக்கொள்ள உரிமை உண்டு. ஒரு தனி மனிதன், தன் சொந்தத்தேவைக்காகமாத்திரம் அதை அபகரித்துக் கொள்ளக் கூடாது—முடியாததுங்கூட! ஒரு தனித் தொகுதியாராலோ, கூட்டத்தாராலோ, ஸ்தாபனத்தா ராலோ கூட இயலாது. ரஸ்தா இடங்களிலே பெஞ்சுகளைப் பரப்பிக் கடைகளை விரிவாக்கிக் கொண்டாலோ, வேலி அல்லது சுற்றுச்சுவர் அமைத்துக் கொண்டாலோ, முன்னால் நீட்டி மேல்மாடிகளிலே 'பால்கனி'கள் கட்டிக் கொண்டாலோ, வண்டிகள், கார்கள் நிறுத்து மிடங்க ளாகவோ, கால் நடைகளை நிரந்தரமாகக் கட்டிப் போட் டிருப்பதோ, தெருவிலே கொடியை நாட்டியிருப்பதோ. இவை யனைத்தும் சட்ட விரோதம் மாத்திரமல்ல, சமுதா யத்திற்கு எதிராக இழைக்கும் தீங்குமாகும். தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொதுப் பாதைகளைப் பாதுகாக்கப் போதுமான நடவடிக்கைகள் நகரசபை எடுத்துக்கொள்ளா விடில், அவற்றின் உண்மைச் சொந்தக்காரராகிய அரசாங்கம், எந்தச் சமயத்திலும் தலையிட்டு அவை, தவறான முறையில் உபயோகப்படுத்துவதையும், பாழாக் கப்படுவதையும் தடுக்கும்.

எல்லா வகையான ஆக்கிரமிப்புகளையும் நல்ல முறை யிலே, சிரமத்துடன் பிழையறத் தீர்த்து வைக்கும் சாதனம் அரசாங்கத்திற்கு உண்டு. கலெக்டர் முதல்

கிராமாதிகாரிகள் வரை தன் சிப்பந்திகள் நீங்கலாக, நகர சபையின் அலுவலகங்களிலே தங்களின் சில சர்வேயர் களையும் விட்டு வைத்திருக்கிறது. அரசாங்கத்தின் உரிமை யைப் பாதுகாப்பதிலே அவர்களின் காப்பாளர்களாக, இந்தச் சர்வேயர்கள் இருக்கிறார்கள். அவர்களின் சம்பளத்தின் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் கவுன் சிலுக்கோ, அல்லது கமிஷனரின் முழுக் கட்டுப்பாட்டின் கீழோ இவர்கள் இல்லை. ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக நட வடிக்கைகள் எடுத்துக் கொள்வதிலே கமிஷனர், நகரசபை யைச் சேர்ந்த அதிகாரியாக மாத்திரம் இருக்கவில்லை. அரசாங்கத்திற்கும், கலெக்டருக்கும் முழுப் பொறுப்பாளி யாக இருக்கிறார். சர்வேயர்கள் ஆக்கிரமிப்புகளைக் கணக்கெடுத்துக் கொண்டே கமிஷனருக்கும், கலெக்ட ருக்கும் அறிவிக்கிறார்கள். அதன் மேல், தான் எடுத்த நடவடிக்கையின் அறிக்கையை, கமிஷனர் மூன்று மாதங் களுக் கொருமுறை கலெக்டருக்கும், ஆண்டுக்கொருமுறை அரசாங்கத்திற்கும் சமர்ப்பிக்க வேண்டும். ரெவினியூ இலாகா எந்தச் சமயத்திலும் தலையிட்டு, அவர்களாகவே ஆக்கிரமிப்புகளை அகற்றி விடலாம். வெளியிலே வேலை பார்க்கும் எல்லா நகரசபைச் சிப்பந்திகளும், சந்தேகப்படும் ஆக்கிரமிப்புகள் அனைத்தையும் அறிவிக்கும்படி எதிர் பார்க்கப்படுகிறார்கள். இவையும் சர்வேயர்களின் பரிசீல னைக்கு அனுப்பப்படும்.

ஆக்ஷேபிக்கக் கூடியவை, ஆக்ஷேபணை யற்றவை என்றும், தற்காலிகமானவை, நிரந்தரமானவை என்றும், ஆக்கிரமிப்புகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஆக்ஷேபிக்கக் கூடிய இனங்களிலே ஆக்கிரமிப்புகளை

அப்புறப்படுத்தவோ, அல்லது இடிக்கவோ நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. ஏனெனில் வழக்குத் தொடர்வதன் மூலம் நிர்வாகத்திற்கு யாதொரு பயனுமின்றி கால தாமதம்தான் ஏற்படுகிறது. சில இனங்களில், சிபார்சு மாத்திரம் செய்யும் அதிகாரங்கொண்ட நகர சபைக்கு முதலாவது அப்பீலும், சொந்தக்காரரின் ஏஜண்ட் என்ற முறையில், முடிவான தீர்ப்பளிக்கும் அதிகாரம் கொண்ட கலெக்டருக்கு, இரண்டாவது அப்பீலும், மனுதார் செய்துகொள்ளலாம். ஆக்கிரமிப்புகள் சம்பந்தமாக கவுன்சிலுக்கும், கமிஷனருக்கும் அபிப்பிராய பேதம் ஏற்படுவது சகஜம். இவை ரெவினியூ இலாகாவின் முடிவிற்காக எப்பொழுதும் அனுப்பி வைக்கலாம். ஆக்ஷேபிக்கக் கூடாதவை சம்பந்தப்பட்ட இனங்களில் கொஞ்ச இனங்களைக் கைவிட்டு விட ரெவினியூ இலாகாவிற்கு அறிவிக்கக்கூடும். பொதுஉபயோகத்திற்காக எந்த விதத்திலும் பயன்படாத ஒரு சில இனங்களை, அதன் தன்மையை அனுசரித்து தனிப்பட்டோருக்கு ஜாரி செய்ய சிபார்சு செய்யலாம்.

பெரும்பாலான இனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டிலும் தற்காலிக லைசென்ஸ் வழங்கப்படுகிறது. இந்தக் கடைசிப் பிரிவிலேதான் அரசாங்க விதிகளுக்கு உட்பட்டு 'பால் கனி'களும், வெப்பத் தட்டிகளும், படிகளும், சாக்கடை மூடிகளும் சேரும். ஆக்ஷேபிக்கக்கூடாத இனங்களுக்கு ஆண்டுதோறும் லைசென்ஸ் வழங்கவும் செய்யலாம். ஒரே தடவையில் ஒரு வருஷத் தவணை வரையும் குத்தகைக்கு விடவும் செய்யலாம். இவை எல்லாம் தற்காலிகமான முறையிலே இருக்க வேண்டும். ஒரு வருஷத் தவணைக்கு மேல் குத்தகைக்கு விடுவதாயிருந்தாலும், நிரந்தரமான

நிலையில் ஆக்கிரமிப்பு இருக்க நேரிட்டாலும், நகர சபையைக் கலந்துகொண்டு, கலெக்டர் தீர்மானிப்பார்.

நகர சபைகளின் சட்டம் 183-ம் பிரிவின் கீழ் மேற்சொன்னபடி நகர சபை, பால்கனிகளுக்கும், வெப்பத் தட்டிகளுக்கும், படிகளுக்கும் லைசென்ஸ் வழங்கலாம். தெரு ஓரங்களையும், ரஸ்தா பக்கங்களையும் குத்தகைக்குவிடலாம். இப்படி தற்காலிகமாகக் குத்தகைக்கு விடக்கூடியவை சுகாதாரத்திற்குப் பாதகமாகவோ, பொதுஜன வசதிக்குக் குந்தகமாகவோ, ரஸ்தாப் போக்குவரத்தைப் பாதிக்கக் கூடியதாகவோ இருத்தல் கூடாது. நகர சபையிடம் ஒப்படைக்கப்பட்ட பொது இடத்திலும், தெருவிலும், தற்காலிகப் பந்தல்களோ, இதர அமைப்புகளோ போட்டுக்கொள்ளும்படி அனுமதிக்க, இதே பிரிவின் கீழ், தான் விரும்பும் நிபந்தனைகளை விதித்து, கமிஷனர் லைசென்ஸ் வழங்கலாம்.

★

## 7. ரஸ்தாக்களை உபயோகிப்பது எப்படி?

நகர மக்களுக்கு வேண்டிய சௌகரியங்களில் முக்கியமானது ரஸ்தா வசதிதான். உண்மையாகக் கவனிக்குமிடத்தில் பஞ்சாயத்தோ, பட்டணமோ அல்லது பெரிய நகரமோ எதை எடுத்துக்கொண்டாலும், மக்களுக்கு முதன்மையாகச் செய்து தரவேண்டிய வசதி ரஸ்தா, தெரு அல்லது சந்து அமைத்தலே.

நகரின் உயிரே நல்ல ரஸ்தாக்கள்தான். ரஸ்தாக்களுக்குப் பிறபாடுதான் தண்ணீரும், வெளிச்சமும் என்றுகூடச் சொல்லி விடலாம். அடர்ந்த காடுகளின் மத்தியிலே மலைகளின்மேலே, முதன் முதலாக ரஸ்தா அமைப்பது மகத்தான காரியமாகவே கருதப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் பாட்டனும், தந்தையும், மகனும் எஞ்சினியர்களாக இருந்து, இந்த மகத்தான பணிக்காகத் தங்கள் வாழ்வையே தியாகம் செய்திருக்கிறார்கள்! பழமையான ஒரு நல்ல நகர சபையுங்கூட, புது ரஸ்தாக்களுக்குத் திட்டமிட்டுச் செய்வதானது ஒரு உற்சாகத்திற்குரிய சாதனையாகும். நகரின் சமுதாய வாழ்விலே ரஸ்தாவின்

பலன் மிக முக்கியமானது. ஏதாவது ஒரு ரஸ்தாவை நாம் தற்காலிகமாக மூடிவிட்டால், அதன் அவசியத்தை அப்போதுதான் நன்கு உணர முடியும். அமெரிக்காவிலே, ரஸ்தாவின் மொத்த நீளத்தைக் கணக்கிடுவதன் மூலம் அங்குள்ள நகர சபைகளின் திறமை மதிப்பிடப் படுகிறது. ரஸ்தாக்களின அடங்கப்பட்ட விஸ்தீரணம், கட்டிடங்கள் அடங்கிய விஸ்தீரணத்திற்கு ஒப்பிடுகையில், அதிகமான சதவீதம் இருந்தால், அந்த நகர சபையின் நிர்வாகம் திறமையானது எனக் கருதப்படும். ரஸ்தாக்களைப் போக்கு வரத்திற்குப் பயன்படுத்துவது என்று கருதுவதைக் காட்டிலும், ரஸ்தாக்களை நகரின் 'இதயம்' என அமெரிக்கர்கள் போற்றுகிறார்கள். ரஸ்தாக்களை அமைப்பது, அந்தப் பிரதேசத்திற்கு அழகை அளிப்பதுடன், அதனுடனேயே வெளிச்சமும் வருகின்றது. அதோடுகூட சுகாதாரம் பெருகுகிறது; ஆக்கிரமிப்புகள் அகல்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக மக்கள் சுயநல மனப் பான்மையை அகற்றி, அந்த ரஸ்தாவைப் பொதுவாக அனைவரும் அனுபவிக்க ஏதுவாகிறது. இங்கிலாந்திலே சிறுவர்கள் தாராளமாக விளையாட, சுத்தமான காற்றை சுவாசிக்க வசதியாக, மாலை நேரத்திலே கொஞ்ச நேரம், சில சில ரஸ்தாக்களை, தற்காலிகமாக ரஸ்தாக்களின் இரு முனைகளிலும் தடுத்து மூடி விடுகிறார்கள்.

ஆனால் அந்தோ! நம் பழமையான பல நகரங்களின் கதி என்ன? நம் ரஸ்தாக்கள் குப்பைத் தொட்டிகளாக, மாட்டுக் கொட்டங்களாக, படுக்கை யறையாக, பெட்டிக் கடைகளாக, கல்யாண வரவேற்பு மண்டபங்களாக, பாவுக் கூடங்களாக, கொல்லப் பட்டரையாக, விறகுக் கடைகளாக, லாரிகள் நிறுத்து மிடங்களாக, சொந்தக் கார்கள்

நிறுத்தும் 'காடி கானுக்களாக' வண்டிப் பேட்டைகளாக, தானியம் உலர்த்தும் முற்றங்களாக. பயன்படுத்தப் படுகின்றன. தங்கள் வீடுகளின் முன் உள்ள முனிசிபல் ரஸ்தாவின் இடத்தை, தங்கள் நன்மைக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மையே, இம்மாதிரி யான சமூகத் துரோகமான செயல்களின் மூல காரணம். இதுதான் சுயநலத்தின் சிகரம்.

மேற்கண்டபடி ரோடுகளைத் துர்விநியோகப் படுத்து வதன் மூலம், சட்ட பூர்வமாக உரிமை பெற்ற லட்சக் கணக்கான மக்களின் வசதிகளை தடுக்கிறார்கள் என்பதை அவர்கள் உணரவில்லை. சமுதாய வாழ்விலே பதுக்கல் காரர்களும், கொள்ளை லாபக்காரர்களும் எப்படியோ, அதேபோலநகராட்சிக்கு இவர்கள் செய்யும்கொடுங்குற்றம். எதையும் பொறுத்துக் கொள்ளும் நம் பெருந்தன்மை இப்படிப்பட்ட பகற் கொள்ளைக்காரர்களையும் சகித்துக் கொள்ளுகிறது. முன்னேற்றப் பாதையில் அடியெடுத்துச் செல்லும் நம் நகர வாசிகளுக்கு இந்த நிலைமை தகுமா? மேற்சொன்ன தீமைகளைப் போக்க முனிசிபல் சிப்பந்தி களும், போலீசாரும் அடிக்கடி நடவடிக்கை எடுக்கும் சமயங்களில் மக்கள் அவர்களுடன் பூரணமாக ஒத்துழைப் பதாக நெஞ்சில் கை வைத்துக் கூற முடியுமா? எண்ணத் திலும், செய்கையிலும் மக்கள் பூரண ஆதரவு கொடுத்தா லொழிய, பத்துப் பன்னிரண்டு முனிசிபல் சிப்பந்திகளோ, ஒரு சில போலீஸ்காரர்களோ, இதைச் செய்ய முடியுமா? இரவும் பகலும் ரோடுகளைப் பாழ்படுத்தும் ஆயிரக்கணக் கான சுயநலத்தன்மையும், செய்யலாமாஎன நினைக்க மறுக் கும் மக்களையும், என்னதான் ஒரு நாளைக்கு ஆறு அல்லது எட்டு மணி நேரம் காத்துத் தடுத்தலும் இயலுமா?

நகர வாசிக்குரிய நல்லுணர்ச்சியைப் பெற்று நடைமுறையிலேயே நாம் பழக்கப்படுத்திக் கொண்டால், இம் மாதிரியான சமூகத் துரோகச் செயல்கள் படிப்படியாகத் தானுகவே மறைந்து விடும். ஆம், ரோடுகளிலே நம் குழந்தைகளை ஆபாசம் செய்ய விடமாட்டோம். நம் வீட்டுப் பெண்களை, வாழை இலைகளையும், குப்பைகளையும் தெருவிலே அடுத்த வீட்டின் வாசற்படியின் முன்னே வீசி யெறிய விடமாட்டோம். மேற்சொன்னவைகளுக்காக குப்பைத் தொட்டிகளையே உபயோகிப்போம். நம் கடைகளுக்கு முன்னே பெஞ்சுகளும், மேஜைகளும் போட்டு அதிக வியாபாரம் செய்யவேண்டும் என்ற ஆசை கொள்ள மாட்டோம். உணவு விடுதிகளின் வாசலின் முன்னே, ரோடிலே சைக்கிள் ஸ்டாண்ட் அமைத்து, சைக்கிள் காரர்களை கவர்ச்சித்து, வருவாயை பெருக்கிக்கொள்ளோம். விறகுகள் வாங்கிஞல் தெருக்களிலே போட்டு பிளந்து கொள்ளோம். மகளின் கல்யாணத்திற்குப் பந்தல் போடும் தேவை ஏற்பட்டால் ரோடிலே குழி தோண்டி, கால் நிறுத்தாமல், மணல் நிரப்பிய தகரப் பீப்பாய்களை நிறுத்திக் கால்கள் ஊன்றிக் கொள்வோம். வீடுகளுக்கு உண்மையிலேயே படி வைக்கும் தேவை ஏற்பட்டால், முனிசிபல் தளத்தின் அகலத்தைப் பாதிக்காத முறையில் அமைத்துக் கொள்வோம். இப்படி எத்தனை எத்தனையோ ஆயிரக்கணக்கான வழிகள், முறைகள் ; இம் முறையிலே நம் ரஸ்தாக்களை நாம் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தால் அவை எவ்வளவு அழகாய் இருக்கும் ! அவைகளை உபயோகிப்பதில்தான் நாம் எவ்வளவு சந்தோஷப் படுவோம்.

★

# 8. கழிவு தண்ணீரைக் கடத்தி விடுதல்

உலக விவகாரங்களில் சிரத்தை கொள்பவர் சிலர். சென்னை ராஜ்யத்துக்குள் நடக்கும் சம்பவங்களைக் கவனித்து, அவற்றால் பாதிக்கப்படுவதாக நினைத்துக் கொள்பவர் பலர். ஆனால், இவர்கள் எல்லோருமே ஒரு முகமாக சிரத்தை எடுத்துக்கொள்வது தங்கள் இருப்பிடத்தை சுற்றியுள்ள விஷயங்களை குறித்து தான். அவை : தங்கள் வீட்டுத் திண்ணையை ஒட்டியுள்ள சாக்கடை, சமீபத்திலுள்ள ஒரு பொது கக்கூஸ் அல்லது தெருக் கோடியில் உள்ள தெரு மின்சார விளக்கு. மனிதர்களுக்குள்ள இந்த ஒரு இயற்கையான தன்மை காரணமாகவேதான், மதுரை வாசியான, அகில இந்திய புகழ் படைத்த காலஞ் சென்ற ஸ்ரீ ஜார்ஜ் ஜோஸப், தேசிய முன்னணியில் தான் அனுபவித்த பல கஷ்டங்களைவிட, அதிகமாக, மதுரை நகர சபைத் தேர்தல் ஒன்றில் தனக்கு நேரிட்ட தோல்வியால் மிகவும சஞ்சலமடைந்தார். இதே மாதிரியாக காலஞ் சென்ற ஸ்ரீ ஜோஸப் சேம்பர்லேன், பர்மிங்ஹாம் நகரத்து மேயராக பணியாற்று

வதை விரும்பி, லாயிட் ஜார்ஜ் மந்திரி சபையில் ஒரு மந்திரியாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கே பணிசெய்யும்படி கிடைத்த வாய்ப்பை, இரண்டு தடவைகளில் உதறி விட்டார்.

நகர சமுதாயத்தின் குறைகள் பலவற்றில் மிகவும் அதிகமாகச் சொல்லாலும், எழுத்தாலும் தாராள மாக விவரிக்கப்பட்டு வருவது கழிவு தண்ணீரைக் கடத்தி விடும் விஷயம்தான். மிகப் பெரிதான இந்தப் பிரச்னை இல்லாத கிராமமோ, பட்டணமோ, அல்லது பெரிய நகரமோ கிடையாது. எந்தப் பஞ்சாயத்து அல்லது முனிசிபாலிட்டியின் அபிவிருத்தியிலும் சாதாரணமாக தெருக்கள்தான் முதல்முதல் உருவாக்கப் படுகின்றன; அடுத்தபடியாக வெளிச்சம் கொடுக்க ஏற்பாடு செய்யப் படுகிறது. அநேக நகரங்களிலும், பெரும்பாலான பஞ்சா யத்துகளிலும், பொது மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யும் ஏற்பாடுகள் இல்லை; இம்மாதிரி இடங்களில் கழிவு நீரைக் கடத்திவிடும் பிரச்னை முக்யத்துவம் பெறுவ தில்லை. ஏனென்றால், சாக்கடைகளில் ஓடவிட்டு வீணுக்கு வதற்குத் தேவையான ஜலம் பொது மக்களுக்குக் கிடைப்பதில்லை! அவ்விடங்களிலுள்ள ஜனங்கள் குளிக்க வும்,' துணிகள் துவைக்கவும், பாத்திரங்கள் கழுவவும், பொதுக் கிணறுகளுக்கும், தூரத்திலுள்ள ஆறுகளுக்கும் போகிறார்கள். பொது அல்லது வீட்டுக் குழாய் மூலம் சுலபமாகவும், தாராளமாகவும் தண்ணீர் கிடைத்து விட் டால், தண்ணீரைச் சிக்கனமாக உபயோகிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தை மக்கள் இயற்கையாகவே இழந்து விடுகிறார்கள். இம்மாதிரி அதிகப்படியான ஜலம் சமையலறைகள், குளிக்குமிடங்கள், கக்கூஸ்கள் மூலம்

கழிவு நீராக வரும்போது, இந்தக் கழிவு நீரைக் கடத்தி விடும் பிரச்னை எழுகிறது. மேடு பள்ளமானதும், திறவை யானதுமான கச்சா சாக்கடைகளில் தண்ணீர் தேங்கி, கருநிறமாக மாறி துர்நாற்ற மெடுக்கிறது. ஆகையால் தான், விரிவானதொரு தண்ணீர் விநியோகத் திட்டம் ஆரம்பிக்கும்போதே, இத்துறை நுணுக்க அதிகாரிகள், இத்துடன்கூட விரிவானதொரு சாக்கடைத் திட்டமும் அவசியமென்று நிர்ப்பந்திக்கிறார்கள். தண்ணீர் விநி யோகம் செய்தல், கழிவு நீரைக் கடத்துதல் இவை இரண்டும் ஒன்றோடொன்று சம்பந்தமுள்ளவை.

வீடுகள்தோறும் கழிவு நீர்த் தொட்டிகள் கட்டுவது மூலம் இப்பிரச்னையை தீர்ப்பதென்பது தற்போதைய நிலைமைக்குப் பொருந்தாத ஒரு பண்டைய காலத்துமுறை. சைதாப்பேட்டையில் சமீபத்தில் ரூ. 80,000 செலவில் கழிவுநீர்த் தொட்டிகளெல்லாம் அகற்றப்பட்டன. சென்னை நகரத்துப் பாதாளச் சாக்கடையுடன்கூட இணைக்கும்படி யாக பாதாளத் தொடர்பை ஏற்படுத்தி, ஒவ்வொரு வீட்டு சாக்கடையும் அவற்றுடன் சேர்க்கப்பட்டது. இம் முறை எல்லா இடங்களிலும் சாத்தியமாய் இராது. அநேக நகரங்களிலும், கிராமங்களிலும் கழிவு நீர்த் தொட்டிகள் இன்னும் இருக்கின்றன. வீடோ அல்லது தொழிற்சாலையோ எவ்வளவுக் கெவ்வளவு பெரியதாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு கழிவு நீர்த் தொட்டி யும் பெரியதாக இருக்கும். பிரபலமாகவுள்ள ஒரு ஹோட்ட லின் கழிவுநீர்த் தொட்டி, ஒரு சிறு கிணறுபோல் தோற்ற மளிக்கும். ஒரு சில நகர சபைகள், இம்மாதிரி உணவு விடுதிகளின் தொட்டிகளிலிருந்து கழிவுநீரை அப்புறப் படுத்த பிரத்தியேக அதிகக் கட்டணங்களை விதிக்கின்றன.

இத்தகைய அளவுக்கு மிஞ்சிப் பெரிதாயிருக்கும் தொட்டிகளில் சேகரமாகும் தண்ணீரைத் தினந்தோறும் அப்புறப் படுத்தத் தேவையாகும் அதிக சிப்பந்திகளின் செலவைக் கணக்கிடும்போது இவ்வதிகக் கட்டணம் நியாயமானதாகத் தோன்றினாலும், தனிப்பட்ட முதலாளிகளைக் கலங்க வைக்கும். இந்த முறை பொதுவாக வரவேற்கப் படமாட்டாதது.

இம்மாதிரி செய்ய முடியாத இடங்களில் அடுத்த படியான நல்லமுறை, தொட்டிகள் உள்ள எல்லா வீட்டுக் கழிவு நீரும் ஒன்ருகச் சேர்ந்து பாயும்படி ஒரு திறவை சாக்கடை கட்டி, அதை வெகு தூரத்துக்கப்பால் கொண்டு போய்க் கடத்தி விடுதல்தான். பிரஸ்தாப ஸ்தலத்தில் வசிக்கும் மக்கள் மிகவும் ஏழைகளாக இருந்தால், நகர சபையே தன் சிலவில் இவ்வேற்பாட்டைச் செய்யலாம். இல்லாவிடில் பொது சுகாதார சட்டத்தின் படி ஒவ்வொரு வீட்டின் உரிமையாளரும், அவரவர் வீட்டின் நீளத்துக்கு, சாக்கடைகளை அவரவர் செலவில் கட்ட வேண்டுமென்று கட்டாயப்படுத்தி இவ்வேற் பாட்டைச் செய்து முடிக்கலாம. சுகாதார, என்ஜினியரிங் இலாக்காக்களைக் கலந்தாலோசித்து, ஒருமித்து வேலை செய்து இதை முடிக்க வேண்டும். இல்லையேல், தவறுதலான இடங்களில், வித்தியாசமான மட்டங்களில், கழிவு நீரெல்லாம் ஒன்று சேர்ந்து கடைசி வரையில் பாயக் கூடாத நிலைமையில் சாக்கடைகள் துண்டு துண்டாக கட்டப்பட்டுவிடும். சரியான மேற்பார்வையின்கீழ், தேவையான சிப்பந்திகளைக் கொண்டு தினந்தோறும் இத் தொட்டிகளைச் சுத்தப்படுத்த ஆகும் செலவு, அவ் வீடுகளுக்கு வசதியான, நீளமானதொரு சாக்கடை கட்டி,

அதைப் பாதுகாத்து வரும் செலவைவிட மிக அதிகமாக ஆகும். பின்னல் சொன்ன முறையினல் ஆபாசம் மிகவும் குறையும். ஏனெனில், தொட்டிகளில் தேங்கி நிற்கும் கழிவு நீர், நீண்டதொரு சாக்கடை வழியாக மெதுவாக வேனும் நகர்ந்து அப்பால் சென்று விடும்.

கழிவு நீரை அப்புறப்படுத்துதல் என்னும் இந்தப் பிரச்னையின் எல்லா அம்சங்களையும் ஆராய்ந்து நன்கறிய வேண்டும். எல்லாத் தொட்டிகளையும், எல்லா நேரங் களிலும் காலி செய்து சுத்தமாக வைத்திருப்பது சாத்திய மாகாது. ஏனென்றால் இதற்காகும் எண்ணற்ற சிப்பந்தி களையும், சாக்கடை வண்டிகளையும், லாரிகளையும் எந்த முனிசிபாலிட்டியும் தயாராக வைத்திருக்க இயலாது. தன்னுடைய குடும்பத்தார், வீட்டுக்குள் தண்ணீரை வீணுகச் சிந்தாமல் சிக்கனமாக உபயோகிக்கிறர்களா என்று ஒவ்வொரு நகர வாசியும் சுயமாகவே, மனப் பூர்வமாய்க் கவனித்து வந்தாலொழிய, இப்பிரச்னை கட்டுக் கடங்காத அளவுக்கு வளர்ந்துவிடும். சுகாதார சிப்பந்தி களுக்கு எதிர்ப்படுகிற இன்னொரு தினசரிப் பிரச்னை என்ன வென்றல், எல்லாத் தொட்டிகளிலிருந்தும் அள்ளுகிற கழிவு நீரை, எங்கு கொண்டு போய் காலி செய்வதென்ப தாகும். இவ்வண்டிகளும், லாரிகளும் அள்ளிய கழிவு நீரைக் காலி செய்ய நகரத்துக்கு வெளியே போவதென்றல், அவை அள்ளிச் செல்லும் நடைகள் பாதியளவுக்குக் குறைந்து போய், தினசரி அவை செய்து முடிக்கும் வேலையும் குறைந்து விடும். அவை அதிக தடவைகள் அள்ளிக்கொண்டு போக வேண்டுமென்றலோ, அள்ளிய தண்ணீரை நகரத்துக்குள்ளேயே சௌகரியமான இடங் களில் காலி செய்ய வேண்டும்; இதனல் அந்த இடங்களி

ளெல்லாம் ஆபாசம் அதிகமாகி, நகர வாசிகளில் இன்னொரு பகுதியார் புகார் செய்ய நேரிடுகிறது.

ஒவ்வொரு முனிசிபாலிட்டியிலும் பூரா இடங்களிலும் பாதாளச் சாக்கடை அமைப்பதுதான் இதற்கெல்லாம் சிறந்த பரிகாரம். இதற்குப் பல லக்ஷரூபாய் செலவாகும் ; சில பெரிய நகர சபைகளில் ஒரு கோடியும் தேவையாய் இருக்கும். இதனால் ஏற்படும் முடிவு, இன்னும் அதிக வரி விதித்தலேயாம். ஆனால், இதைத்தான் பொது மக்கள் எங்கணும் தவிர்க்க முயற்சிக்கிறார்கள் ! இதற்கு மாறாக, ஒரு பாகத்தில் மாத்திரம் பாதாள சாக்கடை இருந்தாலோ அல்லது எப்பாகத்திலுமே இல்லாமலிருந்தாலோ ஆபாசங்களைத் தவிர்ப்பதற்கான பரிகாரம் பூராவும், பொதுமக்கள் கையில் இருக்கிறது. நகரத்தின் நலத்தை எல்லோரும் மனதில் வைத்து, ஒவ்வொருவரும், கிடைப்பதற்கரிதான தண்ணீரை மிகவும் சிக்கனமாக உபயோகித்து, தன் வீட்டுக் கழிவுத் தண்ணீரைக் கடத்திவிடத் தானே தகுந்த ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். வீட்டை ஒட்டி ஒரு அங்குலம்கூட காலி இடம் இல்லையேல், தண்ணீரை அனாவசியமாக வீட்டில் சிந்தாமல் இருந்து, சேகரமாகும் குறைந்த அளவு கழிவு நீரையும், சமீபத்தில் உள்ள பொதுச் சாக்கடையில் கொண்டுபோய் கடத்திவிட வேண்டும். காலி இடமிருந்தால் அதில் சிறு காய்கறித் தோட்டமும், செடிகளும் பயிர் செய்து, குளிக்கும் தண்ணீரை மாத்திரமாவது அவற்றிற்கு உபயோகித்து, அதன் மூலம் அந்தத் தண்ணீர் அங்கேயே சுவரிப் போகும்படி செய்துவிடலாம். சமையலறை, கக்கூஸ் கழிவு நீரை மாத்திரம் பொதுச் சாக்கடையிலோ, தொட்டியிலோ விடலாம். இக்காலத்தில் அதிகச் செலவு பிடிக்காத

'ஸெப்டிக்' தொட்டி கக்கூஸ் அமைத்தால் வீட்டில் வசிப்பவர்களுக்கு வசதியாக இருப்பதுடன் கூட, நகர சுகாதாரம் விருத்தியடையவும் ஏதுவாயிருக்கும். இது சாத்தியமில்லாவிட்டால், தினசரி கழுவிவிட வேண்டிய தாயுள்ள சிமென்ட் தளமிட்ட சாதாரண கக்கூஸுக்குப் பதிலாக, அடிக்கடி மாற்றுவதற்கு லாயக்காக மணல் போட்டுள்ள கக்கூஸ் மிகவும் உத்தமம். குப்பை கூளங்களையும், அசுத்தமான கன பதார்த்தங்களையும் சாக்கடையிலோ, தொட்டிகளிலோ தள்ளிவிடக்கூடாது; இவற்றை தனியாகச் சேகரித்துத் தெருவிலுள்ள குப்பைத் தொட்டியில் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். இல்லாவிடில் வாழை இலை, வாழைத் தோல் போன்றவை சாக்கடைகளை வெகு சீலபத்தில் அடைத்துத் தேக்கி விடும்.

முடிவாக நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், மற்றெல்லா விஷயங்களையும்போல் சுகாதார விஷயத்திலும், நம்முடைய நிலைமையை சமாளிப்பதில், எல்லோரும் ஒன்றுபட்டிருந்தால்தான், நாம் உன்னத நிலையில் நிற்போம்; அன்றி வேறுபட்டோமானால், நாம் கீழ் நோக்கி வீழ்வோம்.

★

## 9. சப்தத்தைக் குறைக்கக் கூடாதா?

படித்த, பண்படைந்த சமுதாயம் அனைத்தும் இசைக்கும், இரைச்சலுக்கும் உள்ள தாரதம்மியத்தை நன்கு உணரும். சில சமயம் இசை, உயிரற்ற ஓசையாக மாறி, எரிச்சலை உண்டாக்கும் சப்தமாகி விடுகிறது. தற்கால ஒலி பெருக்கிகளையும், ஐந்தாம் ரக இசைத் தட்டுகளையும், பழைய சினிமாப்படப் பாட்டுக்களையும் இந்த இனத்திலே சேர்க்கலாம். ஆம்! தலைவலியையும், நரம்புத் தளர்ச்சியின் உணர்ச்சியையும் உண்டாக்கிவிடக் கூடியவைகளே இவை. நகர உணர்ச்சியே இல்லாத நபர்கள், நினைக்கவும் கூடாத முறையிலே, ஒலி பெருக்கிகளை உபயோகிப்பதைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும், பொது சுகாதாரச் சட்டத்தின் கீழும், இந்திய பினல் கோடின் படியும் நடவடிக்கை எடுக்குமாறு,சுகாதார டைரக்டரையும், போலீஸ் இன்ஸ்பெக்டர்ஜெனரலையும் சென்னை அரசாங்கம் கேட்டிருக்கிறது. இது ஒரு வரவேற்கக் கூடிய செய்தியே.

பேராசிரியர் ஒருவர் தன் கல்லூரி மாணவர்களுக்கு ஒரு நாள் சொன்னார் :

"வயலின் குறுக்கே வில்லை இழுத்தால் இனிமையான இசை உதயமாகிறது. ஆனால், கம்பியை விரலினால் அழுத்திக்கொண்டு, அதே போல வில்லை முடிவில்லாமல் இழுத்துக்கொண்டே இருந்தால், அந்த இசை பாடிக் கொண்டுதான் இருக்கும். கேட்டுக் கொண்டிருந்தவர்கள் மாத்திரம் ஓடிவிடுவார்கள். அதாவது இசை மிக எளிதில் இரைச்சலாகச் சிதைந்து விடுகிறது."

'டடடா' பாட்டை முதல் தடவையாகக் கேட்டு இன்புற்றவர்கள், ஆயிரத்தோராவது தடவையாக ஒரு சிற்றுண்டி விடுதியிலிருந்தோ, அல்லது மணப்பந்தலில் இருந்தோ அதே பாட்டை உரத்த சப்தத்தில் கேட்கும் பொழுது, நெற்றியைச் சுழிக்கிறோம்; பல்லையும் கடிக்கிறோம். ஆதலால், எந்தச் சந்தர்ப்பத்திலும், எல்லா நேரங்களிலும் இசையைக் கேட்பது என்பது கூட இன்பமாக இருக்க முடியாது. நகரிலே நம் தினசரி வாழ்வு பூராவிலும், பலதரப்பட்ட இரைச்சல்கள் நம்மைப் பற்றித் தொடரும்பொழுது நாம் கோபத்தால் துடித்தால், அது தவறில்லை.

இசைத் தட்டுச் சங்கீதத்தை, எல்லாக் காலங்களிலும் ஒலி பரப்புவதன் மூலம் மற்றவர்களின் அருவருப்புக் காளாகிறார்கள். விளம்பரப்படுத்துவதற்காக உணவு விடுதியும், ஆடம்பரத்திற்காகக் கல்யாண வரவேற்புகளும் இசைத்தட்டுகளை ஒலிபரப்பும் பாபத்திற் குள்ளாகியிருக்கின்றன. சிந்தனை யுள்ள நகர வாசிகள், இவைகளை ஒதுக்கி வைத்தால் நிலைமை விருவிருப்புடன் சீர்திருந்தும். கல்யாணத்திலே அமைதியான இனிமை நிறைந்த இசையை நிலவச் செய்யவேண்டும். வந்த விருந்தினர்

களின் காது செவிடு படும் படியாக 'பாண்டு' வாத்தியங்களை முழங்கக் கூடாது. அமர்ந்திருக்கும் வாடிக்கைக் காரர்களின் காதுகளிலே படும்படியாக, மிகவும் மெதுவான தொனியிலே, இனிமையான இசைபரப்பும் அளவுக்கு ஒரு ரேடியோ வைத்திருப்பதுபற்றி ஒரு சிற்றுண்டி விடுதி பெருமை கொள்ளலாம்.

ஒரு ரேடியோ வாங்கிக் கேட்க வேண்டுமென்பது நம் நீண்ட நாள் ஆசை. ஆனால், இரவிலும் பகலிலும் அடுத்த வீட்டுக்காரர்களும் இதைக் கேட்க விரும்புகிறார்கள் என்பது என்ன நிச்சயம்? ஒரு நல்ல நாகரிகம் வாய்ந்த ரேடியோ சொந்தக்காரர், தன் அறைக்குள்ளே மாத்திரம் சப்தம் நிலவும்படி ரேடியோவைத் திருப்பி வைத்துக் கொள்வார். இப்படி இருந்தால்தான் உண்மையிலேயே நாம் அனுபவிக்க முடியும்.

சில மோட்டார் சொந்தக்காரர்களும், மோட்டார் சைக்கிள்காரர்களும் உரத்த சப்தத்துடன் கூடிய ஹாரன்களைப் பொருத்தி வைத்துக் கொள்கிறார்கள். தங்களுக்கு முன்னாலே போக்கு வரத்து இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி,ஒவ்வொரு நிமிஷத்திற்கும், வினாடிக்குமாக ஹாரன்களை அழுத்திக்கொண்டே போகிறார்கள். உண்மையாகவே ஒரு நல்ல டிரைவர் மெதுவான சப்தமுடைய ஹாரன்தான் வைத்திருப்பார். அதுவும் அவசியம் ஏற்படும்போதுதான் உபயோகிப்பார்.' சிறு நெருப்பணைக்கும் இயந்திரம் போவதுபோல, சைக்கிள்காரர்கள் தங்கள் சுழலும் மணியை ஓயாமல் அடித்துச் செல்வது எவ்வளவு வெறுப்பைத் தருகிறது!

ஒரு கூட்டத்திலே இருக்கும்பொழுது நாம் ஏன் சப்தமிட்டு இரைச்சலை உண்டாக்க வேண்டும்? மேற்கு நாடுகளிலே, இப்படிப்பட்ட கூட்டங்களில் இரைச்சலே காணப்படுவதில்லை என்று கூறப்படுகிறது. தவறுதலான முறையிலே பயிற்றுவிக்கப்பட்ட ஒன்றிரண்டு குழந்தைகள் தவிர, மாதா கோவில்களிலே அமைதி இருக்கத்தான் செய்கிறது; மசூதிகளைப்பற்றி அவ்வளவாகத் தெரியாது. நமது, மகத்தான—புனிதமான கோவில்களினுள்ளும் சப்தம் இன்னும் குறைந்துதான் இருக்க வேண்டும்.

தனிப்பட்ட முறையிலேயே எடுத்துக்கொண்டோமானால் சப்தத்தை முழக்கும் உடைந்த பாத்திரங்களாக இருக்கக்கூடாது. நாம் அமைதியைக் கடைப்பிடிப்பது பற்றிப் பெருமை கொள்ள வேண்டும். நாம் ஏன் கர்ண கடூரமாக அருவருக்கத்தக்க முறையிலே சிரிக்க வேண்டும்? அமைதியாகப் பேசி, கூற வேண்டியவைகளைச் சிறந்த முறையிலே வற்புறுத்திவிடலாம் என்றால் ஏன் இரைய வேண்டும்? இசை யரங்குகளிலே பேசி, சங்கீதப் பிரியர்களையும், பாடகர்களையும் ஏன் கோபத்திற்குள்ளாக்க வேண்டும்? சினிமாக் கொட்டகைகளிலே இடைவிடாது பேசி, நம் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் அனுபவிக்க வேண்டிய உரிமைகளை ஏன் பறிக்க வேண்டும்?

நகர உணர்ச்சி தனிப்பட்டவர்களின் நல்நடத்தைகளை ஒழுங்குபடுத்துவது மாத்திரமல்ல. சமுதாய வாழ்வையும், தொழிலையும், வர்த்தகத்தையும் நல்ல நிலையில் நிற்கச் செய்கிறது. நவீன நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பிராந்தியங்களை 'அமைதிப் பிரதேசமாகப்' பிரகடனப் படுத்தியிருக்கிறது. ஒரு பிரசவ விடுதிக்குச் சமீபம் ஒரு

மாவு மில்லேயோ, பாத்திரத் தொழிற்சாலேயையோ இருக்க விடக் கூடாது. ஜன நெருக்கடி மிகுந்த இடத்திலே சினிமாக் கொட்டகை கட்டவிடக் கூடாது. ஒரு ஆஸ்பத்திரிக்குச் சமீபம், மத ஊர்வலம், வாண வேடிக்கைகள் விடலாமா? சுவாமி சன்னதிக்கு முன்னுல் தையல்காரர்கள் கும்பலாக இருந்து ஒரே இரைச்சல் மயமாக ஆக்க விடலாமா ?

நகர வாசிகள் தனிமையிலும் சரி, கூட்டமாக இருந்தாலும் சரி, சப்தத்தைக் கூடுமானவரையும் குறைத்தால் வாழ்க்கை மிகவும் அனுபவிக்கக் கூடியதாக இருக்கும்.

★

# 10. மதியின்றி உமிழ்தல்

சீன மக்கள் தம் முன்னோர்களை வழிபாடு செய்து வருகிறார்கள். நாம் அவ்விதம் செய்வதில்லை. ஆனால் நம்முன்னோர்களின் பழக்கவழக்கங்களைமதித்துப் பின்பற்றி வருகிறோம். ஏன், காலத்திற்கு ஒவ்வாத முன்னோர்களின் அநேக பழக்கங்களை நாம் விடாப்பிடியாகக் கைக்கொண்டு வருகிறோம். மத்திய அரசாங்க மாஜி மந்திரி ஸ்ரீ மேத்தாப் அவர்கள், மதுரை நகருக்கு விஜயம் செய்தபொழுது, நகர சபையின் வரவேற்பு வைபவத்தில் பேசுகையில், ஒன்றை நமக்கு ஞாபகப்படுத்தினார். அதாவது ' திருமலை நாயக்கர் மஹாலைப் போன்ற பழங்காலச் சின்னங்களைக் கொண்டு நாம் பெருமைப் படலாம். ஆனால் அதேசமயத்தில் அவை அக்காலத்திய யதேச்சாதிகாரத்தையும், தொழிலாளிகளை அடிமைகொண்டு வேலை வாங்கினதையும நமக்கு ஞாபகப் படுத்துவதாகத் தோன்றுகின்றன. ஆகையால் நாமும், அவைகளைப் பார்த்து அதுபோன்ற செயல்களில் ஈடு படாமல், தேசத்தின் புதிய சகாப்தத்தில் பொது மக்க

ளுக்குப் பயன் தரத்தக்க நல்ல காரியங்களைச் சாதிக்க முற்படுவோமாக' என்று உணர்த்தினர்.

நம் தொன்றுதொட்ட பழக்கங்களில் எச்சல் உமிழ்தலும் ஒன்று. முன்பின் யோசியாமல் கண்ட இடங்களில்—கக்கூஸ்கள், வீடுகள், ரஸ்தாக்கள், ஆலயங்கள், பொதுக்கூட்டங்கள் முதலிய எல்லா இடங்களிலும் எச்சல் துப்புகிறோம். எங்கே துப்பலாம், எங்கே துப்பக்கூடாது என்ற வித்தியாசமே தெரிவதில்லை. ஆனால் ஒரு இடத்தில் மட்டும் துப்புவதில்லை. அதுதான் தன் உடம்பு. இந்த அனுச்சாரப் பழக்கம், எதுமுதல் நம் தேசத்தில் ஆரம்பமானது என்ற ஆராய்ச்சியில் நம் இந்திய ஆராய்ச்சியாளர் ஒருவர் இறங்கி இருப்பதாக பத்திரிகையில் காணப்பட்டது. இதை விட, இந்தப் பழக்கம் எப்பொழுது கைவிடப்படும் என்ற ஆராய்ச்சியில் கவனம் செலுத்தப்படுமானல், மிகவும் பிரயோஜனமாய் இருக்கும்.

இந்தப் பழக்கம் நம் தேசத்தை அல்லது ஆசியாவை யொட்டினதா என்பதை பைபிள் புத்தகத்தில்பார்க்கிறோம். ஏசுநாதர் மேல் துவேஷம் கொண்டவர்கள், அவர் மீது எச்சல் உமிழ்ந்தார்கள். இது சுமார் 2000 வருடங்களுக்கு முன் பாலஸ்தீனத்தில் நிகழ்ந்தது. அல்லது இப் பழக்கம் ஆசியாவின் தேச ஆசாரமா? ஆப்ரிக்காவில் இதைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களில் இப்பழக்கம் நிச்சயமாகக் காணப்படுவதில்லை. அங்கே புத்தி இழந்தவர்கள் பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளிலும், க்ஷயரோக வியாதியஸ்தர்கள் பணிக்கங்கள் வைத்து உமிழ்வதாகவும் புத்தகங்களில் பார்க்கிறோம்.

நம் தேசத்திலோ பழங்கால சரித்திரங்களும், ஓவியங்களும் மொகலாய பிரபுக்கள் செல்லும்பொழுது பின்னே சற்று தூரத்தில் வேலைக்காரர்கள் எச்சல் பணிக்கங்கள் தாங்கிச் செல்லும் காட்சியை ஞாபக மூட்டுகின்றன. உமிழும் எச்சல் மூலம் கெடுதி ஏற்படக்கூடாது என்ற அளவுக்கு அந்தக் கனவான்களாவது பொதுநல உணர்வு கொண்டிருந்திருக்கிறார்கள். அவர்களுடைய பணிக்கமேந்துபவர்கள் தனிப்பட்ட வேலையாளாய் இருந்த போதிலும் பொது நல சுகாதார ஊழியர்களில் தலை சிறந்த ஒருவராவர். சென்னை கார்பரேஷனுடைய முதல் சுகாதார அதிகாரிக்கு 'நகர சுத்தி செய்பவர்' என்றே அதிகாரப் பெயர் இடம்பெற்றிருந்தது உங்களுக்குத் தெரியுமா? ஏன் அவ்வளவு தூரம் பழைய காலத்திற்குச் செல்வானேன். நமது பாட்டன், பாட்டிமார்களும் அவர்களுடைய பணிக்கங்களும் நம் நினைவில் நிற்கிறதல்லவா? ஒவ்வொரு அறையிலும் ஒரு பணிக்கத்தை வைக்கும் யோசனை உதயமாகி வரும்வரை, இதன் ஆசிரியரின் பாட்டியம்மாள்கூட தான் செல்லும் ஒவ்வொரு அறைக்கும் பணிக்கத்தைக் கொண்டு வரும்படி இதன் ஆசிரியரைச் சொல்லுவதுண்டு.

இன்றுகூட சில கிராமங்களிலே யார் அதிக தூரம் துப்பக்கூடுமோ அவர்களுக்கு பரிசு வழங்கும் போட்டிப் பந்தயம் நடைபெறுகிறது.

உமிழ்தல் ஒரு ஆபாசமான அருவருக்கத் தக்க வழக்கமாகும். அது நாற்றத்தையும், பார்க்க அருவருப்பையும் உண்டாக்குகிறது. எல்லா கேளிக்கை சாலைகளிலும், தற்பொழுது சட்டபூர்வமாக தடை விதிக்கப்பட்ட

புகை பிடிக்கும் பழக்கத்தைவிட இது மோசமானது. பழக்கங்களினாலோ அல்லது காய்ச்சல், ஜலதோஷத்தினாலோ துப்புகிறவர்களைக் காட்டிலும் வெற்றிலை, புகையிலை போடுகிறவர்கள் அடிக்கடி துப்புவதின் மூலம் அதிகமான ஆபாசத்தையும், அசுத்தத்தையும் உண்டாக்குகிறார்கள். அதிகமாக பரவியுள்ள இந்தப் பழக்கம், சமூக விரோதமான காரியம் மட்டுமல்லாமல், மனிதனின் நாகரீக உணர்ச்சிக்கும் விரோதமான செய்கையாகும். பகுத்தறிவற்ற இவ்வித உமிழ்தலின் காரணமாக மாதந்தோறும் க்ஷயரோகத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் இந்தியாவில் அதிகரித்து வருகின்றனர். பொது மக்களின் கிளர்ச்சி ஒன்றை ஏற்படுத்தி, எல்லா ஜனங்களும் இத்தகைய கெட்ட பழக்கத்திற்கு எதிராகப் போராடி, சொல்லிலும், செயலிலும் நடந்து கொண்டாலொழிய, நமது பொது இடங்களிலும், கட்டிடங்களிலும் எப்பொழுதும் எச்சல் துப்பும் பழக்கம் நீடித்தே வரும். நாம் வெற்றிலை போடுவதனால் அந்தச் சாற்றை விழுங்கி விடலாம். அல்லது நமது அறிவுள்ள பாட்டிமார்களைப்போல பணிக்கத்தை வைத்துக் கொள்ளலாம. மற்றவர்கள் துப்புவதைப் பார்த்தால், அவர்களை வேண்டுகோள் மூலமும், பிரசாரம் மூலமாயும் தடுப்போமாக! இவ்விதமாக நமது நகரின் சுகாதாரமுன்னேற்றத்திற்கு பணி செய்வோம். நமது புதிய சுதந்திரம் நமக்குப் பல நல்ல காரியங்களைச் செய்ய உரிமை அளித்திருக்கிறது. **ஆனால் கண்ட விடங்களில் துப்புவதற்கு அல்ல!**

★

# 11. அனுமதியற்ற கட்டிடங்களை அகற்றுதல்

நாட்டிட விதிகளுக்கும், நகர் நிர்மாணத் திட்ட விதிகளுக்கும் முரணாக அனுமதியில்லாமல் கட்டப் பட்டுள்ள கட்டிடங்களை அப்புறப் படுத்தும் வேலையானது, நகர சபையின் நிர்வாக அதிகாரி சந்தோஷமில்லாமல், ஜனங்களின் வெறுப்புக்கிடையே பிடிவாதமாய் நிறை வேற்ற வேண்டிய கடமைகளில் ஒன்றாகும். நம் தேசத்தில் மக்களின் சுற்றுப்புற வாழ்க்கை நிலை உயர்ந்து அவர்கள், சுகாதாரம், காற்றோட்டம், சூரிய வெளிச்சம் இவை நிறைந்துள்ள வீடுகளில் சுகமாயும், ஆரோக்கியமாயும் வாழ வேண்டுமென்ற பரந்த நோக்கத்துடன் மத்திய அரசாங்கமும், ராஜ்ய-அரசாங்கமும், கட்டிட விதிகளையும் நகர் நிர்மாணத் திட்ட விதிகளையும் ஏற்படுத்தி யிருக் கிறார்கள். முடிவில் இவை தேசத்திற்கு அளிக்கும் நன்மையைக் கருதி இவ்விதிகள் கண்டிப்பாய் அமுல்

நடத்தப்பட வேண்டுமென்று அடிக்கடி சர்க்கார் உத்திர விட்டிருக்கிறார்கள்.

ஜில்லா முனிசிபல் சட்டத்தின்கீழ் சர்க்காருக்கு அளிக்கப் பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு 15—7—42-ல் சர்க்கார் உத்திரவில் கட்டிட விதிகள் வகுக்கப்பட்டன. அதிலுள்ள 15-வது விதிப்படி, சர்க்கார் தாங்களாவது அல்லது மனுவின்பேரிலாவது, ஷை விதிகளி னின்று பூரணமாகவோ, அல்லது குறிப்பிட்ட விதிகளி லிருந்தோ, ஒரு கட்டிடத்திற்கு விலக்கு அளிக்கலாம். கட்டிடங்கள் கட்டப்படும் மனைகள், கட்டிடங்கள் இவை சம்பந்தமாய் சில கொள்கைகளும், மனைகளை, வசிக்கும் வீடுகளாக கட்டுவதை வரையறை செய்யும் விதிகளும், அவ்விதிகளின்படி அனுசரிக்க வேண்டிய நிபந்தனைகளும் அடங்கியிருக்கின்றன. இவ்விதிகளை அமுல் நடத்த வேண்டிய பொறுப்பு நிர்வாக அதிகாரியிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. அவர் அது விஷயத்தில் நகர சபைக்கு பொறுப்பாளி அல்ல, சர்க்காருக்குப் பொறுப்புள்ளவர். இவ்விதிகளில் ஏதாவதொரு விதி பாதிக்கப்படும் விஷயத்தில் நகர சபைக்கு அப்பீல் செய்து கொள்வதற்கு இடமில்லை.

ஜில்லா முனிசிபல் சட்டத்தின் 322-விதி அப்பீல்கள் சம்பந்தப்பட்டது. 205-வது விதியில் 1, 3 பிரிவுகளும், 216-வது விதியில் 3-வது உப பிரிவும் மாத்திரம் அதில் இடம் பெறுகின்றன. ஷை சட்டத்தின் 10-வது அத்தியா யத்தில் கண்ட ஏனைய விதிகள் தவிர, 205-வது விதியைப் பொறுத்தமட்டில் அனுமதிக்கப்பட்ட பிளான்களிலிருந்து மாறுதல்களுடன் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களின்

சம்பந்தமாய் அதன் 1, 3-வது உப பிரிவுகளின் பிரகாரம் அப்பீல் மனுக்களை விசாரிக்கும் அதிகாரம் நகர சபைக்கு அளிக்கப் பட்டிருப்பதைத் தெளிவாகக் காணலாம்.

விதி 216 (1)ன் கீழ் நிர்வாக அதிகாரி, ஒரு தற்காலிக உத்திரவின் மூலம், எழுப்பியுள்ள கட்டடத்தை இடிக்குமாறு சுவான்தாரைக் கேட்டுக் கொள்ளலாம். விதி 216 (2)ன் கீழ் அவ்வித உத்தரவின் நகல் ஒன்று, சார்வு செய்து நியாயமானகாலதவணைகொடுத்து, டை உத்திரவை ஏன் ஊர்ஜிதம் செய்யக்கூடாது என்று காரணம் காட்டுமாறு அவ்வித உத்தரவின் நகல் ஒன்றை 216 (2) விதியின்கீழ் அவர் சார்வு செய்ய வேண்டும். விதி216 (3)ன் கீழ் அந்த உத்திரவை ஊர்ஜிதம் செய்யலாம். அவ்விதம் 216(3) விதியின் கீழ் ஊர்ஜிதம் செய்யப்பட்ட உத்தரவின் பேரில்தான் நகரசபையிடம் அப்பீலுக்கு இடம் உண்டு. அடுத்தாற்போல் இடிக்க நடவடிக்கை எடுக்குமுன் பாதிக்கப்பட்ட சுவான்தார் விரும்பினால் நகர சபைக்கு அப்பீல் செய்துகொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கும் முறையில் ஏழுநாள் இடைவேளையை அனுமதிக்குமாறு இப்பொழுது உத்திரவிடப் பட்டிருக்கிறது,

பிறகு விதிகள் 338–340, 344 பிரகாரம்,இடிப்பதற்கும் அதற்கு ஏற்படும் செலவை வசூலிக்கவும் நோட்டீஸ் பிறக்கப்படும். இந்த சந்தர்ப்பத்தில் இடிப்பதை நிறுத்து வதற்காக நகர சபைக்கு அப்பீல் செய்து கொள்ள சட்ட மில்லை. இதை சர்க்காரும் தங்களுடைய 13-9-50 தேதி உத்திரவில் ஊர்ஜிதம் செய்திருக்கிறார்கள். முடிவாக இடிப் பதற்கு ஒரு தேதி குறிப்பிடப்படுகிறது. அன்று, ஆக்ஷேப கரமான பாகத்தை இலாகா மூலம்—தேவையிருந்தால்

போலீஸ் உதவியைக்கொண்டு அப்புறப்படுத்தி, அதனல் ஏற்படும் செலவை சம்பந்தப்பட்ட கட்சிக்காரரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

கமிஷனரின் எந்த உத்திரவின் பேரிலாவது தமக்கு ஆக்ஷேபணையிருந்தால் கட்சிக்காரர் எந்தச் சமயத்திலும் நகர நிர்மாண டைரக்டருக்கு! நேரடியாகவோ, அல்லது கமிஷனர் அல்லது நகர சபை மூலமாகவோ அப்பீல் செய்து கொள்ளலாம்.

கட்டிட விதி 15ன்கீழ் விதிவிலக்கு அளிப்பது சம்பந்தமாக, நகர நிர்மாண டைரக்டர் பிறப்பித்த உத்திரவு கமிஷனருக்கும், அவர் மூலமாக சுவான்தாருக்கும் அனுப்பப்படும. நகர நிர்மாண டைரக்டர் விதிவிலக்கு அனுமதிக்கும் பக்ஷத்தில், சுவான்தாருக்குத் தெரிவித்து, கட்டிட விதிகளின்படி தேவையான பிளான்கள், விபரங்களுடன் மனுச் செய்துகொள்ளச் சொல்லி, அதன் பேரில் விதிவிலக்கு அளித்த பிரகாரம், தேவையான லைசென்ஸ் வழங்கப்படும்.

விதி 15ன், பிரகாரம் நகர நிர்மாண டைரக்டர் பிறப்பித்துள்ள உத்திரவே முடிவானது. அதன் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், அதை அமுல் நடத்தவும் கமிஷனர் சட்டப்படி கட்டுப்பட்டவராவார். டைரக்டரின் உத்திரவுகளை எதிர்த்து நகர சபைக்கோ, அல்லது நகர சபைத் தலைவருக்கோ அப்பீல் செய்து கொள்ளும் வழியை அநேகர் கையாளுகிருர்கள். இதற்கு சட்டத்திலோ விதிகளிலோ இடமில்லை.

நகர நிர்மாண டைரக்டர் பிறப்பித்த உத்திரவின் பேரில், புதிய காரணங்கள் ஏதேனும் இருந்தால், முதலில்

அவருக்கும் பிறகு இரண்டாவது தடவை சர்க்காருக்கும், புனராலோசனை செய்ய மனுக்கள் செய்து கொள்ளலாம். அவ்வித மனுக்களை டைரக்டருக்கோ அல்லது சர்க்காருக்கோ சுவான்தார் அனுப்ப வேண்டும். அதன்பேரில் விதிவிலக்கு அளித்து, உத்திரவு பெறும் வரையில் மேற்கொண்டு கட்டக் கூடாது. விதி விலக்கு மனுச் செய்திருந்தாலும், அல்லது டைரக்டர் உத்திரவை புனராலோசனை செய்ய மனுக் கொடுத்திருந்தாலும், இதற்கிடையில் சுவான்தார் கட்ட ஆரம்பிப்பதையும், தொடர்ந்து கட்டுவதையும் தடைப்படுத்தியும், அவ்விதம் கட்டினல் அதை இடிக்கவும் நடவடிக்கை எடுக்க கமிஷனர் கடமைப்பட்டவராவார்.

கடைசியாக, இக்கட்டிட விதிகள் நிரந்தரமாக அனுசரிக்கப்பட வேண்டுமாயின், அவ்விதம் அவைகளை அமுலுக்குக் கொண்டுவரப் படுவதை, வாடிக்கையாகக் கருதவேண்டுமாயும் சொல்லப்பட்டிருக்கிறது. உத்தரவு பெருமலும், விதிகளுக்கு முரணுகவும், கட்டப்படுவதைத் தடுக்கவும், அவ்விதம் கட்டப்பட்ட கட்டிடத்தைக் காலா காலத்தில் இடிக்கவும் கமிஷனர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ஒரு விஷயத்தால்தான் சர்க்கார் கமிஷனர்களின் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் படுமென்று பயமுறுத்தி அச்சுப் பிரதிமூலம் உத்தர விட்டிருக்கிருர்கள். சர்க்கார் அல்லது நகர நிர்மாண டைரக்டர் மாத்திரம்தான் இடிக்கும் உத்தரவை நிறுத்தச் சொல்லலாம்.

அப்பீல் விதிகளாகிய 205(1), (3) 216 (3), பிரிவுகளின் கீழ் நகர சபையாருக்கு அப்பீல் கொடுப்பது பற்றி

அதிகார சம்மந்தமான விதிகளுடன் முனிசிபல் சட்டத்தின் 322-வது விதியைச் சேர்த்துப் பார்க்கும்போது, எந்த அப்பீலின் பேரிலும் கவுன்சிலின் தீர்ப்பே முடிவானது என்று சொல்லப்படுகிறது. ஆனால் சட்டத்தின் விதிகளுக்கு முரணாகவோ அல்லது பாதகமாகவோ லைசென்ஸ், அல்லது அனுமதியளிக்க கவுன்சிலுக்கு உண்மையாக அதிகாரமில்லை. தன் அதிகாரத்தின் வரையறைக்கு உட்பட்டு செய்யப்படும் தீர்ப்புகள்தான் நகர சபையின் தீர்ப்புகளாயிருக்கும். கட்டிடவிதிகளின் குறிப்பிட்ட பாகங்களை மீறிச் செல்லுமாறு நகர சபையை நகர மக்கள் வற்புறுத்துவதில் பிரயோஜனமில்லை. கமிஷனர் உண்மைக்கு மாறாக நடந்திருப்பதாக கவுன்சில் கருதினால், டைரக்டரின் கவனத்திற்கு, கவுன்சில் எந்த நேரத்திலும் கொண்டு போகலாம். அல்லது ஒரு விதியின் நோக்கத்தை, கமிஷனர் தவறாக அபிப்ராயம் கொண்டிருப்பதாக நகர சபை கருதினாலும், அதை எடுத்துக் காட்டலாம். நகர சபை எப்பொழுதும் ஒரு விஷயத்தை, ஒரு முறை விதி விலக்கு அளிக்க சிபார்சு செய்யலாம். நகர நிர்மாண டைரக்டருக்கு நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் செய்துள்ள அப்பீலின்பேரில், கவுன்சில் தன் சிபார்சையோ, அல்லது ஒரு தீர்மானத்தையோ செய்யலாம். அல்லது தகுதியில்லை என்றால் நேரடியாகத் தள்ளுபடியும் செய்யலாம்.

நம் தேசத்தின் வருங்காலத்தின் நன்மையைக் கருதி நகர நிர்மாணத் திட்ட விதிகள், கட்டிட விதிகள் இவைகளைக் கண்டிப்பான முறையில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்னும் அபிப்ராயத்தை, நம் மக்கள் அரசாங்கம் ஊர்ஜிதம் செய்திருக்கின்றது. யுத்த பிற்கால

திட்டங்கள் வகுக்கும் கமிட்டிகளில் 'போர்' கமிட்டி பொது நலத்தைப் பற்றிய ஒரு பிரசித்தி வாய்ந்த கமிட்டியாகும். பாதிக்கப்படும் ஸ்தல மக்களிடையே தங்களுக்குள்ள நெருங்கிய சம்பந்தத்தினுல், பிரயோஜனமான, ஆனுல் ஜனங்கள் விரும்பாத ஒரு கட்டிட விதிகளை அமுலுக்கு கொண்டுவர, நகர சபைகளும் அதன் அதிகாரிகளும் தகுந்த கருவிகளாக இருப்பது சாத்தியமாயிராது என்ற அளவுக்கு இக்கமிட்டி கூறியது. இங்கிலேயில் ஒவ்வொரு வரும், வளர்ந்து வரும் நம் சுதந்திர தேசத்தில் சுயநலத் தைக் கருதி தத்தம் சொந்தக் கட்டிடம், சொந்த சௌகரி யங்கள் இவைகளைக் கருதாமல், வருங்கால சந்ததிகளின் நலனையும், ஆரோக்கியத்தையும் கருதி, அதன் மூலம் தேசத்தின் வாழ்வைக் கருதிக் கொள்வதுதான் அவர் களின் அத்தியாவசியமான கடமையாகும்.

ஆகையால், நகர சபையிடம் முன்அனுமதி பெற்று லைசென்ஸ் வாங்காமல் எந்த ஒரு கட்டிடத்தையும் கட்ட ஆரம்பிக்க வேண்டாமென்று நகராட்சி, நகரத்திலுள்ள எல்லா மக்களையும் சிரத்தையுடன் கேட்டுக் கொள்ளு கிறது. அனுமதியளிப்பதில் கால தாமதம் இருக்கு மானுல், அதை நேரிலாவது, எழுத்திலாவது நகர நிர்மாண டைரக்டர் அல்லது கமிஷனர் அல்லது நகர சபைத் தலைவர் இவர்களிடம் தெரிவிப்பதை வரவேற்கப் படும்.

★

# 12. தேர்தலும் உத்தியோகஸ்தர்களும்

உலகின் ஒரு முனையிலிருந்து மற்றொரு கோடி வரைக்கும் தேர்தலின்பரபரப்பை இப்பொழுது காணலாம். ஆஸ்திரேலியாவிலும், பிரான்சிலும் நடந்ததற்குப் பிறகு இங்கிலாந்திலும் விருவிருப்பாக நடந்தது. அடுத்தபடியாக அர்ஜண்டினாவில் அமெரிக்காவும் தன்னுடைய 1952-ம் ஆண்டுத் தேர்தலுக்காகத் தயாராக ஆரம்பித்து விட்டது. இலங்கையும் அப்படியே.

கோடிக்கணக்கான வாக்காளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்; பரந்த பரப்பளவைக் கொண்டுள்ள பிரதேசம். வயது வந்துள்ளோர் அனைவருக்கும் வாக்குரிமை யளித்துள்ள ஒரு ராஜ்யம், இவைகளில் எதை எடுத்துக் கொண்டாலும் சரி, இந்தத் தேர்தல் மனித சமுதாயத்தின் சரித்திரத்திலேயே குறிப்பிடத்தக்க மகத்தான சம்பவமாகும்.

தேர்தல் சம்பந்தமாக உத்தியோகஸ்தர்களின் நிலைமை என்ன என்பதை ஆராய்வது பயனுள்ளதாக

இருக்கும், தேர்தல் காலங்களிலே நகர சபை அதிகாரி களும், சிப்பந்திகளும் அனுசரிக்க வேண்டிய விதிகளை யும் நன்ருகத் தெரிந்து கொள்ள வேண்டும். அரசாங்க ஊழியர்களுக்கும் இந்த விதிகள் பொருந்தும். 'கட்டுப் பாடான நடுநிலைமை' என இரண்டு வார்த்தைகளிலே அவைகளைச் சுருக்கிக் கூறிவிடலாம். தேர்தலில் நிற்கும் ஒரு அபேட்சகரின் நன்மைக்காக எந்தவிதமான சகாயமும் எந்தப் பொது ஊழியரும் செய்யக்கூடாது. தேர்தலில் 'வாக்குரிமையை' வழங்கும்படியாக ஒருவரைத் தூண்டவோ, 'வாக்குரிமை' வழங்குவதைத் தடுக்கவோ, அல்லது 'வாக்குரிமைக'ளைச் சேகரிக்கவோ, எந்த முறை யிலும் அவர் முயற்சிக்கக் கூடாது. தன்னுடைய வாக் குரிமையை மாத்திரம் வழங்கலாம். இன்ஞருக்கு வாக் குரிமை வழங்கப் போகிறேன் என்ருே, வழங்கி விட்டேன் என்ருேகூட வெளியிலே கூறக் கூடாது.

இந்த விதிகளை மீறிவிட்டதாக நிரூபிக்கப்பட்டு விட்டால் வழக்கமாகப் பிரயோகிக்கப்படும் தண்டனை, பதவியிலிருந்து நீக்கிவிடுவதுதான். இப்படிப்பட்ட ஒருவர் தேர்தல் அதிகாரியாகவோ, போலிங் அதிகாரியாகவோ, குமாஸ்தாவாகவோ இருந்துவிட்டால் பதவி நீக்கத்துடன் சிறை தண்டனையும் பெறுவார். 1951-ம் ஆண்டின் தேர்தல் சட்டத்தின் (*Representation Of the People Act*), 129-வது பிரிவின்கீழ் ஆறுமாத சிறை தண்டனையோ, அபராதமோ அல்லது இரண்டும் சேர்ந்தோ விதிக்கப் படலாம்.

ராணுவத்தினர் உட்பட சம்பளம் பெறும் அதிகாரிகள் அனைவரும் அரசியலிலிருந்து ஒதுங்கி நிற்பதுதான்

திறமையும், ஒழுங்கும் நிறைந்த ஜனநாயகத்தின் அஸ்திவாரமாகும். மக்கள் தங்களை ஆள்வதற்கு, யாரைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதில், பொது ஊழியர்கள் அலட்சியமாகவே இருக்க வேண்டும். எந்தக் கட்சி அதிகாரத்திற்கு வந்து ஆட்சியை அமைத்தாலும், தன் பதவி காலத்தில், நாட்டின் அத்தனை அதிகாரிகள்—ராணுவத்தினர் இவர்களுடைய விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் அடைந்தே தீரும்.

நடுநிலைமை, பட்சபாதமற்ற நிலையின் அளவிலேதான் பொது ஊழியர்களின் திறமையையும், பயனையும் மதிப்பிட முடியும். பட்சபாதமுள்ளவர்களாக மாறினாலோ, மக்கள் அவர்களை ஏதாவது ஒரு கட்சியில் சேரச் செய்துவிட்டாலோ, கருவியின் முனை மழுங்கினதற்குச் சமமாகும். நாட்டிற்குப் பயனற்றதாகவும் போய்விடும்.

அரசாங்க ஊழியர்களும், ராணுவத்தினரும், கப்பற் படையினரும், அரசியலிலே பங்கெடுத்துக் கொண்டதினால் ஏற்பட்ட கதியை ஒரு சில நாடுகளின் பழங்கால, தற்கால சரித்திரங்களிலிருந்து நாம் அறிவோம். இது ஒரு நாட்டின் தற்கொலையாகத்தான் இருக்கும்.

அரசியல் அபிப்பிராயங்களைத் தன்னிஷ்டம்போல் வெளியிட்ட பெரிய, கீர்த்தி பெற்ற அமெரிக்க வீரன் ஜெனரல் மக்ஆர்தரைப் பதவியிலிருந்து நீக்கிய சம்பவம் சரித்திரப் புகழ் வாய்ந்த சிறந்த உதாரணமாகும்.

★

# 13. நகர சபைகளின் பொருளாதாரம்

எந்த நிர்வாகத்திற்கும் பொருளாதாரம்தான் ஜீவாதாரம். தன் எல்லைக்குள் வசிக்கும் ஜனங்களுக்கு தேவையான சமூகத் தொண்டுகளை செய்வதற்காகவே ஏற்பட்டிருக்கிற நகர சபைகள் விஷயத்தில் இந்நியாயம் மிகவும் பொருந்தும். இந்த சேவைகளுக்கு பணச் செலவு ஆகும்; இப்பணம் ஜனங்களிடமிருந்து வரி மூலமாய்த் தான் வசூலிக்கப்படுகிறது. சாதாரணமாக ராஜ்ய சர்க்காரிடமிருந்தும், அபூர்வமாக மத்திய சர்க்காரிடமிருந்தும் சில மான்யங்களும், கடன்களும் கிடைக்கின்றன. சுருங்கச் சொல்ல வேண்டுமானால், பணச் செலவில்லாமல் செய்யக் கூடிய சமூக சேவைகள் ஒன்றுமே இல்லை. ஆகையால் ஒரு நகர சபையிடம் பணமே இல்லையானால், அதன் வாழ்வு முற்றுப்பெறும். அதனிடம் போதுமான பணம் இல்லையானால், அங்கே பொது ஜனங்களுக்கு செய்யப்பட வேண்டிய சௌகரியங்கள் சரிவர நடைபெறாது; போதுமானதாகவும் இருக்காது.

வெகு காலமாகவே, அதிலும் குறிப்பாக சென்ற சில வருஷங்களாக, இந்த ராஜ்யத்து நகர சபைகள் தங்கள் வருமானம் போதாமல் இருப்பதையும், அதை விருத்தி செய்ய முடியாமையைப் பற்றியும் புகார் செய்துகொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு நகரமும் வளர்ச்சியடைந்து, அதன் நிர்வாகமும் விரிவடையும்போது, அதன் செலவுகளும் * அதிகரிக்கின்றன; ஆனால், நகர சபையின் வருமானமோ, அதற்கேற்றபடி பெருகுவதில்லை. வரி கொடுப்போர் அதிக அனுபவசாலிகளாக ஆகி, அதிகமான சௌகரியங்களை அடைய அவாவுறுகிறார்கள். சென்ற பத்து வருஷங்களாக, பணத்தின் நாணய மாற்று மதிப்புக் குறைந்துள்ளது; ஒவ்வொரு நகர சபையின் வருமானமும் அநேகமாய் இரட்டித்திருக்கிறது; ஆனால் அதன் செலவுகள் பல மடங்காகக் கூடியிருக்கின்றன. இதே நிலைமைதான் ராஜ்ய சர்க்காரிலும் நேர்ந்திருக்கிறது. இதனால் ஐக்கிய இந்தியா முழுவதிலும் உள்ள எல்லா நகர சபைகளிலும் அதிருப்திகரமான விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையைப் பரிசீலனை செய்ய மத்திய சர்க்கார் கொஞ்ச காலத்திற்குமுன், '**ஸ்தல ஸ்தாபனப் பொருளாதார ஆய்வுக் குழு**' ஒன்றை நியமிக்க வேண்டிய தவசியமாயிற்று.

இதை எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும்போது, இந்த ராஜ்யத்தின் நகர சபைத் தலைவர்கள் சங்கத்தின் மூன்றாவது மகாநாட்டில் சொற்பொழிவாற்றியபோது, அதன் தலைவர் ஸ்ரீ டி. கே. ராமா அவர்கள், கவலைக்கிடமான இந்நிலையைப்பற்றி விசேஷமாகக் குறிப்பிட்டதில் ஆச்சரியமில்லை. நகர சபைகளின் பொருளாதாரத்தை சீர்திருத்தப் பல அரிய ஆலோசனைகளை அவர் கூறியிருக்

கிறார். அவற்றில் சிலவற்றையாவது, ராஜ்ய, மத்ய சர்க்கார்கள் ஏற்றுக்கொள்வார்களென்று நம்பப்படுகிறது. மின்சாரம், போக்குவரத்து முதலிய திட்டங்களை தேசியமய மாக்குவது என்றால் அவற்றைப் பூராவையும் அப்படியே சர்க்கார் எடுத்துக் கொள்ளவ தென்பதல்ல என்று ஸ்ரீ டி. கே. ராமா அபிப்பிராயப் படுகிறார். லாபகரமான மின்சார ஸ்தாபனங்கள், நகர சபைகளின் வசமே இருந் தாலும், அதுவும் ஒரு விதத்தில் தேசியத் தன்மை யுடையது தான் என்று அவர் மதிக்கிறார். ஏனென்றால், அந்த ஸ்தாபனம் ஒரு கம்பெனி அல்லது அதன் பங்கு தாரர்கள் இவர்களின் சொந்த லாபத்துக்காக நடத்தப் படவில்லை. அந்த நகர மக்களின் பொது நன்மைக்காகவே நடத்தப்படுகிறது. பஸ் போக்குவரத்து சம்பந்தப்பட்ட வரையில் அந்த ஸ்தாபனத்தின் முதலீட்டில் பெரும் பகுதி அந்தந்த ஸ்தல ஸ்தாபனத்துக்குச் சொந்தமாக இருக்க வேண்டும் என்பது அவர் ஆலோசனை.

அவர் இன்னொரு முக்கிய விஷயத்தையும் எடுத் துரைத்தார். எவ்வித வரியும் செலுத்தாமலேயே நகர சபை செய்து தரும் எல்லாவித சௌகரியங்களை மாத்திரம் அனுபவித்துவருகிற ஆயிரக் கணக்கானதொழி லாளிகள் நகரங்களில் வசிக்கிறார்கள். ஆனால், இவர்க ளிடம் வேலை வாங்கும் முதலாளிகள் பெரும் தொகைகளை வருமான வரி மூலமாய் டில்லிக்கு செலுத்தி வருகிறார்கள். ஆகையால் மத்திய சர்க்கார் வசூலிக்கும் வருமான வரியில் ஒரு பகுதியை நகர சபைகளுக்குக் கொடுக்க வேண்டும். யுத்தகாலத்துக்கு முன் இருந்த முறையின் படியே, ஒவ் வொரு நகர சபையும், எவ்வளவு தொகை கல்வி வரியாக வசூலிக்கிறதோ அதற்கு சமமான ஒரு தொகையை

ராஜ்ய சர்க்கார் அந்தந்த நகர சபைக்குக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். சில குறிப்பிட்ட பொருள்களின் பேரில் ஒரு (*Octroi*) சுங்கத்தையும், ரஸ்தா மார்க்கமாய் வரும் பிரயாணிகளின் பேரிலும் யாத்ரீகர் வரியையும் விதிக்க வேண்டுமென்றும், தொழில் வரி விகிதத்தில் உயர்ந்த விகிதத்தை ரூ. 1000–க்கு உயர்த்த வேண்டு மென்றும் சில ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார். இப்பொழுது நகர சபையின் பிரதான வருமானம் சொத்து வரி ; அந்த வரி விதிக்க அனுசரிக்கும் கணக்கு முறையிலிருந்தே அவ்வரி இனி உயர்த்தத் தகுந்ததில்லை என்று தெளிவாகும். இவ்வரி விஷயமாயும் கூட, கார்பொரேஷனில் உள்ளபடி தரத்துக்குத் தக்கபடி உயரும் விகிதம் ஒன்றே அனுஷ்டிக்க வேண்டுமென்று கூறுகிறார்.

ஸ்ரீ டி. கே. ராமா சென்னையில் இவ்வாலோசனைகளைச் சொல்லிக்கொண்டிருந்த அதே சமயத்தில், மதுரைக்கு விஜயம் செய்த மத்திய சர்க்காரின், தொழில், மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள், வரவேற்புக்குப் பதிலளிக்கையில் மேற்சொன்ன அபிப்ராயங்களுக்கு ஒற்றுமையாக, நகர சபையின் பொருளாதார அபிவிருத்தி பிரச்னையைக் குறிப்பிட்டார். அவருடைய சிறந்த அறிவுபரந்த அனுபவம் அகில இந்தியாவிலும் பலதிறப்பட்ட நிர்வாகங்களில் அவருக்கு ஏற்பட்டிருக்கும் சம்பந்தங்கள், இவைகளைக்கொண்டு ஸ்தல ஸ்தாபனங்களும் ராஜ்ய சர்க்காரும் கைக் கொள்ள வேண்டிய சிலவழிகளை அவர் விளக்கினர். ' நகர சபைகள் வியாபாரத் துறைகளில் இறங்க வேண்டும் ' என்றார். ரொட்டி உற்பத்திசாலைகள், சிற்றுண்டி சாலைகள், சாப்பாட்டு விடுதிகள், சினிமாக் கொட்டகைகள் முதலிய

வற்றை நகர சபைகள் ஆரம்பித்து சிக்கனமாக, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டான முறைகளில் நடத்தலாம் என்றார். வீடுகள் கட்டுவதில் நகர சபைகள் பெரிய மூலதனம் போட்டு, ஆதாயம் கிடைக்கும் முறையில், தன்னுடைய சிப்பந்திகளுக்கும், ஏழை ஜனங்களுக்கும், வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். கடன்கள் வாங்கும் பொறுப்பு சர்க்காரிடம் இருப்பதுதான் நல்லதென்று ஒரு அபிப்பிராயத்தை சென்னை நிதி மந்திரி சென்ற மாதத்தில் சொல்லியிருந்தாலும், நகர சபைகள் லாபகரமான திட்டங்களுக்குத் தேவையான தொகைகளைத் தனிநபர்களிடமிருந்து கடனாக வாங்கிக்கொள்ளும் அதிகாரத்தை தாங்களே பெற வேண்டு மென்று இவர் ஆலோசனை கூறினார். நகர ஆட்சியில் உள்ள, வரி விதித்தல், வரிகள், லைசன்ஸ் கட்டணங்கள் முதலியவற்றை வசூலித்தல் முதலிய, மக்கள் விரும்பாத வேலைகளை, சம்பளம் வாங்குகிற நிர்வாக உத்தியோகஸ்தர்கள் வசமே விட்டுவிடலாமென்று கூறினார்.

சென்னை சர்க்கார் முடிவு செய்ய வேண்டிய அநேக பிரச்னைகள் இன்னும் பாக்கி நிற்கின்றன. 1947—சென்னை ஜில்லா முனிசிபாலிட்டிகளின் சட்டத்துக்கான, விஸ்தாரமான திருத்தங்களை, சென்னை செக்ரெட்டேரியட்டில். இதற்கென்று நியமிக்கப்பட்ட விசேஷ அதிகாரிகள் தயார் செய்தபோது, நகர சபைகளின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய, விளம்பர வரி விதித்தல், தனி நபருக்கு சொந்தமான மார்க்கெட்டுகளை கட்டாய ஆர்ஜிதம் செய்தல், நகரத்தில் நடைபெறும் எல்லாவித வியாபாரங்கள் பேரிலும் ,லைசன்ஸ் கட்டணங்கள் விதித்தல்

முதலிய சில அதிகாரங்கள், அவற்றில் சேர்க்கப்பட்டிருந்தன.

இப்பொழுது ஆலோசிக்கப்பட்டு வருகிற, நகராட்சி நிர்வாகத்தை திருத்தி யமைக்கும் திட்டத்தில், நிர்வாக அமைப்பில் செய்யவேண்டிய மாறுதல்கள் ஏதாவது இருந்தால், அவற்றுடன் கூட, பொருளாதார நிலைமையையும் சேர்த்துக் கவனிக்க வேண்டிய காலம் ஏற்கெனவேயே வந்து விட்டது. இதைக் கவனித்து முன்னேறுவதற்கான ஏற்பாடுகள் செய்தால்தான், வருங்காலத்திலாவது நகர சபைகளின் பொருளாதார நிலை பலமடைந்து, அதன் மூலம் மக்களுடைய சந்தோஷத்திற்கும், திருப்திக்கும் தகுந்த பணிகளை சிரமமில்லாமல் ஆற்ற முடியும்.

★

# 14. கமிட்டி முறை

அரசாங்கத்தாலோ, எந்த நிர்வாகத்தாலோ ஒரு விஷயத்தைப் பரிசீலனை செய்யக் கமிட்டிக்கு அனுப்பப் பட்டு விட்டால், ஒரேயடியாக மறைந்து போகாவிட்டாலும் விஷயம் முடிவாகத் தாமதமாகலாம் என இக்காலத்தில் பொதுமக்கள் நினைக்கிறார்கள். இந்த எண்ணம் தவறு என்றே தோன்றுகிறது. ஏனெனில் பெரும்பான்மையான இனங்களில் சிக்கலான பிரச்னைகளைத் தீர்ப்பதில் மிகவும் பயனுள்ளவை எனக் கமிட்டிகள் உண்மையிலே நிரூபித்தி ருக்கின்றன. சில சமயங்களில் ஒரு கமிட்டியோ அல்லது கமிஷனோ விஷயங்களைத் தாமதப் படுத்தலாம்; அல்லது தனது சக்திக்கு மீறிய காரணத்தால், அதை உருவாக்கிய தாய்ச் சபையினால் பூரா விஷயமும் ஒத்திவைக்கப்படலாம். தனி மரம் தோப்பாகிவிடுமா? கமிட்டி முறையைக் குறைவு படுத்த இப்படிப்பட்ட ஒரு சில சம்பவங்களை ஆதாரமாகக் காட்டிவிட முடியாது. முக்கியமாக இங்கிலாந்து நாட்டின் நகர சபைகளிலே கமிட்டிகளும், உப-கமிட்டிகளும் நிர்வாக அமைப்பின் பெரும் பதவியை வரிசைப்படுத்துகின்றனர்

சென்னை நகர சபையில் கூட தனி அதிகாரங்கள் பெற்ற, தன்னிச்சையாகச் செயலாற்றும் பல நிரந்தரக் கமிட்டிகள், எண்ணற்ற சிறிய விஷயங்களைப் பரிசீலித்துப் பைசல் செய்கின்றன. இதன் மூலம் நகர சபையின் நேரம் விரயமாவதினின்றும் தடுக்க முடிகிறது. சென்னை ராஜ்ய நகர சபைகள் சம்பந்தப்பட்ட மட்டில், ஜில்லா நகர சபைகளின் சட்டப்படி நிறுவப்பட்ட, தன்னிச்சையாகச் செயலாற்றும் சட்ட பூர்வமான கமிட்டிகள் இரண்டு உண்டு. அவைகள் நியமனக் கமிட்டியும், குத்தகைக் கமிட்டியும் ஆகும். ஐம்பது ரூபாய்க்கு மேற்பட்ட சம்பளமுள்ள நியமனங்களை நியமனக் கமிட்டி கவனிப்பதுடன், கவுன்சிலின் கீழ் உள்ள மேல் பதவிகளுக்குப் பதவி உயர்வு அளிப்பது சம்பந்தமாகவும் தன்னுடைய தீர்ப்பை வழங்குகிறது. நகரசபைத் தலைவர், கவுன்சிலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அங்கத்தினர், கமிஷனர் அடங்கிய இக்கமிட்டி, மேலதிகாரிகளுக்கு அனுப்பப்படும் அப்பீல்களைத் தன் குறிப்புகளுடன் அனுப்பி வைக்கிறது.

இதுபோலவே குத்தகைக் கமிட்டியும், நகர சபைத் தலைவர், கவுன்சில் தேர்ந்தெடுத்த ஒரு அங்கத்தினர், கமிஷனர் இவர்களுடன் அமைக்கப்படுகிறது. எல்லாவித சிறிய குத்தகைகளையும், ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்ட சாமான்கள் வாங்குவதையும் இது கவனிக்கிறது. நகரமைப்புச் சட்டத்தால் அமைக்கப்பட்ட இன்னொரு சட்ட பூர்வமான கமிட்டியும் உண்டு. இதன் தலைவரை இக் கமிட்டியே தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. நகரமைப்புத் திட்டங்கள், இது சம்பந்தமான விதிகளை அமுலாக்குவது முதலான விஷயங்களை இக்கமிட்டி கவனிக்கிறது. வரி விதிப்பு அப்பீல், சுகாதாரம, கல்வி, ஆர்ஜிதம், வேலைகள்,

வாசகசாலை, பெயரிடுவது போன்ற விஷயங்களைக் கவனிப்பதற்காகப் பல கமிட்டிகள் நியமிக்கப்படுகின்றன. வரி விதிப்பு அப்பீல் கமிட்டி தவிர, கமிட்டிகள் தங்களுக்கு கவுன்சிலால் அனுப்பப்படும் விஷயங்களைப் பரிசீலனை செய்யும் மூன்று சட்ட பூர்வமான கமிட்டிகள் (Statutory Committee) போல இக்கமிட்டிகள் தன்னிச்சையாகச் செயல்பட முடியாது. இதன் முடிவுகள் பூராவும் சிபாரிசுகள் முறையிலே இருக்கும். இவை மறுபடியும் கவுன்சில் முன் அங்கீகரிக்கவோ, மாற்றவோ கொண்டுவரப்படவேண்டும். இக்கமிட்டிகளிளெல்லாம், வரிவிதிப்பு அப்பீல் கமிட்டிக்கு மாத்திரம், வரிவிதிப்பு அப்பீல்களை முடிவு செய்ய, கவுன்சிலின் முழு அதிகாரத்தையும் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டியின் முடிவுகள் கவுன்சிலின் அங்கீகாரத்திற்காகக் கொண்டுவரப்படுவதில்லை. கவுன்சில் பதவி காலம் முழுவதும், நகரசபைத் தலைவர் அழைக்கும்போதெல்லாம் இக்கமிட்டிகள் முறையுடன் நன்கு செயல்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சிக்கல்கள் நிறைந்த தனித்தனி விஷயங்கள், கவுன்சிலின் பரிசீலனைக்கு வரும்பொழுது குறிப்பிட்ட விஷயத்தை, நன்கு பரிசீலித்து கவுன்சிலுக்கு அறிக்கைகள் அனுப்ப, அவ்வப்பொழுது கவுன்சிலால் தனித்தனி அட்ஹாக் கமிட்டிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அதனுடைய அறிக்கை, கவுன்சில் முன் சமர்ப்பிக்கப்பட்டவுடன், ஒவ்வொரு அட்ஹாக் கமிட்டியும் முடிவடைந்து விடும்.

ஜில்லா நகர சபைகளின் சட்டம் 23-வது பிரிவின்கீழ், கவுன்சில் தாங்கள் பிரித்துக்கொடுக்கக்கூடிய அதிகாரங்களைச் செலுத்தவோ, கடமைகளை நிறைவேற்றவோ, அலுவல்களைச் செய்யவோ கமிட்டிகளை ஏற்படுத்தலாம் ;

அல்லது தனிப்பட்ட அங்கத்தினர்களையாவது கமிட்டிகளை யாவது நியமித்து, தாங்கள் அனுப்பக்கூடிய எந்த விஷயங்களைப் பற்றியும் விசாரணை செய்து அறிக்கை அனுப்பும்படியோ, ஆலோசனை கூறவோ கேட்கலாம். சட்டத்தின் இப்பிரிவினின்றும் ஒரு வித்தியாசம் கிளம்பு கிறது. கவுன்சில் ஒரு கமிட்டிக்கு மாத்திரம் தன் அதிகாரங்களையும் கடமைகளையும் அளிக்கலாம். அதாவது அப்படிப்பட்ட கமிட்டியானது கவுன்சிலின் அங்கீகாரத்திற் காக மறுபடியும் விஷயத்தை அனுப்பாமல் முடிவாகவே மேற்கண்ட விஷயத்தை பைசல் செய்து விடலாம். மேலும், தனிப்பட்ட அங்கத்தினர்களையோ (தலைவர் உள்பட) கமிட்டியையோ, கவுன்சில் அனுப்பும் விஷயத்தை விசாரிக்கவோ, அறிக்கை சமர்ப்பிக்கவோ, ஆலோசனை கூறவோ மாத்திரம் கவுன்சில் நியமிக்கலாம். அதாவது கவுன்சிலின் தனி அங்கத்தினருக்கு, ஏன், நகர சபைத் தலைவருக்குக்கூட தன் முழு அதிகாரத்தை அளிக்க முடியாது. சட்டத்தின் 24-வது பிரிவின்கீழ், அங்கத்தின ரல்லாத எந்த நபரையும், சம்மதிக்கப்பட்ட, பாதிக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் நியமிப்பது சட்டபூர்வமானதாகும். தேர்தலில் வாக்காளர்களின் தொந்தரவுகளுக்கு இஷ்டப்படாத, முக்கியமானவர்களின் பழுத்த அனுபவத்தையும், அறிவு நுட்பத்தையும், நிர்வாகத்திற்கு நன்கு பயன்படுத்திக் கொள்ள கவுன்சிலை அனுமதிக்கும் இந்த விதி, இருப்ப தாகத் தெளிவாகிறது. கவுன்சில்கள் இவ்விதியைப் பயன்படுத்தி ஆலோசனைகள் தந்து உதவும்படி கேட்பது அபூர்வமாகவே இருக்கிறது. அங்கத்தினர்களால் தேர்ந் தெடுக்கப்படும் " ஆல்டர்மென் " முறை, கார்ப்பரேஷனி

விருந்து பக்கத்து நகர சபைகளுக்கும் விஸ்தரிக்கப் பட்டால் இந்த அபிப்பிராயம நடைமுறைக்கு வரலாம்.

பதினைந்து தினங்களுக்கு ஒருமுறை ஒரு நகர சபையின் எல்லா அங்கத்தினர்களும் கூடி நிர்வாகத்தின் சிறிய சிறிய விஷயங்களை யெல்லாம் விவாதித்துக் கொள்வதற்குப் பதிலாக பல விஷயங்கள் சமபந்தப்பட்ட கமிட்டிகளுக்கு அனுப்பப்படுகின்றன. இதனால், தனியாகச் சிலர் மாத்திரம் கூடி, உரிய தஸ்தாவேசுகளைப் படித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து பிரச்சினைகளில் குறிப்பான, நல்ல முடிவு காண்பதற்கு அனுகூலமாகிறது. ஒரு பள்ளியின் சிப்பந்திகளை அதிகரிப்பது, சில தெருக்களுக்குப் பெயரிடுவது, வாசகசாலைக்குச் சில நூறு புத்தகங்கள் தேர்ந்தெடுப்பது, வார்டுகளிலே விளக்குகள் அமைப்பதுபோன்ற அன்றாட நிர்வாகவேலைகளை, கவுன்சில் அமர்ந்து விவாதித்துக்கொண்டிருப்பது உண்மையிலேயே கால விரயந்தான். இப்படிப்பட்ட சில்லறை விஷயங்களை சம்பந்தப்பட்ட கமிட்டிகளின் பரிசீலனைக்கு அனுப்பி, பரிசீலனையின் முடிவுக்கு அறிக்கை அனுப்ப கேட்டுக் கொண்டால், மிகவும் பயனுள்ளதாய் இருப்பதுடன் திறமையும் அதிகரிக்கும்.

கமிட்டிக்கு அனுப்பினால் விஷயம் தாமதமாகும் என்ற பயம, உண்மையிலே தவறாயிருந்தாலுங்கூட,' முதலிலே கூறியபடி நியாயமல்ல. கமிட்டி முறை மிகவும் பயனுள்ள தாக இருக்க வேண்டுமானால், கமிட்டிகள் ஒழுங்காகக் கூட வேண்டும். ஒவ்வொரு அங்கத்தினரும் வேலையில் பிரதானப் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும். கமிட்டிக் கூட்டங்களிலே கலந்து போதிய கவனம் செலுத்த இயலா

விட்டால், கமிட்டி அங்கத்தினர் பதவியை விட்டு விடவேண்டும். இரண்டாவதாக, ஒவ்வொரு கமிட்டியின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருத்தல் கூடாது. விஷயமனைத்தையும் விரிவாகப் படித்து, தெளிவாகப் பரிசீலனை செய்யச் சிறிய கமிட்டிகளால்தான் இயலும்.

முடிவாக, இங்கிலாந்தின் நடை முறையில் இருப்பதுபோல்; கமிட்டி ஒரு விஷயத்தைப் பைசல்செய்யக் கூடும சமயம், சம்பந்தப்பட்ட விஷயமாக கவுன்சிலின் சம்பளச் சிப்பந்திகளின் அபிப்பிராயம் என்ன என விவரிக்கும்படி, இலாகா தலைவர்களையோ, அவர்களுடைய உதவியாளர்களையோ, அழைத்துக் கேட்பது கமிட்டியின் முக்கிய கடமை. நிர்வாகத்தினரின் தரப்பைக் கேட்ட பிறபாடு, சம்பந்தப்பட்ட அதிகாரியை போகச் சொல்லிக் கேட்டுக்கொண்டு, அவர் அபிப்பிராயத்துடனும், கிடைத்திருக்கும் தஸ்தாவேசுகளைப் பரிசீலனை செய்தும், நகரின் நன்மைக்காகச் கமிட்டி எந்த முடிவுக்கும் வரலாம். மேற்சொன்னபடி கமிட்டிகள் இயங்கினால், பதினைந்து தினங்களுக்கு ஒரு முறை கூடும் கமிட்டிக் கூட்டங்களிலே, கமிட்டிகளின் அறிக்கையைச் சமர்ப்பித்தும் வந்தால் நிர்வாகம் திறமையுடன் இயங்குவதுடன், துரிதமாகவும் செயல்படும். கவுன்சிலும் தன் நிகழ்ச்சி நிரலுக்கு அதிக நேரம செலவிட வேண்டியதில்லை. நகரின் ஆட்சியிலே பிரதானப் பிரச்னைகளில் கவுன்சிலின் முழுக்கவனத்தையும் செலுத்த முடியும்.

★

28 MAR 1957